V 4 ~~1139~~ 1140 8 Oct 1931

188938

835

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ அக்டோபர் ௴ 8உ [No. 40.

7-NOV

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 781
2. ஆண்டாள்—(கல்வியும் கவித்திறமையும்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 783
3. சிதம்பரதேவர் சரிதம் Dr. V. S. அருணாசலம்பிள்ளை 785
4. யாப்பிலக்கணம் (அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா) 788
5 சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம் 149 - 161) K. இராமரத்நம் ஐயர் B A. 790
6. களவியற் காரிகை விளக்கம்—'சம்பந்தன்' 792
7. கம்பராமாயணம் (பள்ளிபடைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 795
8. மதிப்புரை—(கோம்பி விருத்தம்) 797
9. வர்த்தமானம். 799

கலாநிலயம்

மறுப்பது முறுதியாமே 5.

188938

குண்டாகர்னனும் ஜயவிஜயர்களுஞ் சேர்ந்து நம்மனோர்க்கோர் அரிய இரகசியத்தை நிரந்தரம் கற்பித்துநிற்கின்றனர். கடவுளைமுற்றிலுங்கருத்தினின்று கைகழுவிவிட்டுவிடுவதைப்போன்ற நயமை வேறில்லை. மன்பதைத்தொகுதியின் மாபெரும் பகுதியோர் இந்நாள் இருந்து விவகரிப்பது இந்நிலையே என்பதில் ஐயமுறுவாரும் உளரோ. கடவுள் இல்லையென்றியம்ப மாட்டார், உண்மையே; ஆயினும் அக்கடவுள் இருப்பதைப்பற்றி நினைத்தவரும் அலர். கடவுளின் நினைவிருப்பதற்குரிய அடையாளமொன்றும் அவர் சொற்களிலேனும் செய்கைகளிலேனும் காணமாட்டாது. அவாவிய கருமம் கைகூடா விடத்தும் இடுக்கணால் உடைந்தழியுங் காலத்தும், "எல்லாம் ஈசன் செயல், நாமென்ன செய்யலாம்" என்பன போன்று அவர் வாய்வரும் சொற்கள் சிறிதேனும் நம்பத்தகுந்தனவாகா. தமது ஆசையுங் கருமமுங் கைகூடவில்லையே என்ற துயரத்திலும் அக்கருமத்தைச்செய்யமாட்டாதவர் என்று பிறர் தம்மை இழிவுற நினைப்பார்களே என்னும் பரிபவமே கிடந்து மனிதரை அதிகம் உழக்குகின்றது. இப்பரிபவத்தின் பொறுப்பைத் தம்தலையினின்று தூக்கி வேறோர் தலையில் சுமத்துதற்கு ஓர் வகை நாடுகின்றது மானுடமனம். "இவன்தான் என் காரியத்தைக் கெடுத்தவன்" என்றுகுறிப்பிட்டுப் பிறனொருவனைக் காட்டக்கூடுமாயின், தங்கள் பரிபவத்தை அந்தச் சீற்றத்தினிடையே கரைத்து அப்பிறன் பழியெனுந் திரையினால் தம்முடைய தாழ்மையை மறைத்துக்கொள்ளலாம். அப்படித் தம்முடைய கேட்டிற்குக் காரணமானவன் இவன் என்று நேரே எவனையும் காட்டுதற் கியலாதகாலங்களில் என்செய்வது! 'தெய்வங் கெடுத்தால் செயலுண்டோ' என்றென்றறைந்து ஒருவராலுங் கண்டுகேட்டுச் சோதிக்க இயலாத அந்தக் கடவுளைக் குறித்துவிடுகின்றனர். ஆதலால், தம்பிழை யெல்லாந் தம்பிரான் பழியே ஆகிவிடுகின்றது. இத்துணையும் படிப்படியாகச் சிந்தித்துச் செப்புகின்ற சூழ்ச்சியினால் விளைகின்றனவென்றெண்ண வேண்டா. பரிபவத்தால் புரள்கின்ற மனம் ஓராது பற்றிக்கொள்கின்ற ஒரு சிறு துரும்பிற்கே இவர் திறத்தில் கடவுள் நிகராகின்றது. இனி, "கடவுளை நம்பியே இக்கருமத்தை ஆரம்பிக்கின்றேன்" என்றின்னபல சொல்வோர் எல்லோருந்தான் கடவுளிலேநிலைத்த கருத்தினர் என்று எண்ணுவதற்குமோ இடமில்லை. கருமம் கைகூடாவிடின் என்ன செய்வதென்றஞ்சி அப்பரிபவத்திற் கோர் புகலிடம் முதலிலேயே சமைத்துக்கொள்கின்ற புணர்ப்பாகவே இது பெரும்பாலும் முடிகின்றது. ஆதலின் இன்னவர்தம் முன்புத்தியைப்பாராட்டினால் ஒருகால் பாராட்டலாமேயன்றிக் கடவுளின்பால் இவர் வைத்துள கருத்தின் உண்மையை இச்சொற்கள்கொண் டளப்பது பெரும்பாலும் பிழைபடும். கடவுளின் நினைவிற்கு உண்மையில் இடந்தந்த நன் மனத்தினர் ஒன்றிற்கும் அவாவமாட்டார். அவாவின் சிதைவே பரிபவமாதலால், அப்பரிபவம் ஒன்றும் அவரை வந்தெய்திப் பற்றுமாறுமில்லை. ஆதலின் ஆள்வினையின் முதலிலேனும் கையற்ற கடையிலேனும் தாம் புக்கொளிதற்கோர் முறையெனக் கடவுளைக் கல்லிவைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை.

இவ்வாறுவறிதாயவெறுஞ்சொற்கள்புறம்போகஎஞ்சிய கடவுள்இக்காலமாந்தர்கருத்தினில்எங்கும்இல்லை. அக்கருத்துடைய இரண்டொருவர் எவ்விடத்தேனுமிருப்பாராயின் அவர்தாம் இவ்வுலகப்போக்கினுள்

ஒட்டாமல் அகன்று நிற்கின்றனர். மற்று அகலாம லிருந்தும் கடவுளின்நினைவு கலந்துலவுமொருவாழ்க்கைசெலுத்துபவர் மிகச் சிலரேனும் உளர் என்பதை மறுக்கலாகாதெனினும், அன்னோர் எண்ணிப்பகர்வதற்கும் பற்றாத குறைந்தவராதலின் கடவுளைப் பகையற மறந்ததோர் நிலையிலேயே இக்காலமாந்தர் இருக்கின்றார் எனச் செப்புவதில் பிழையுளதென நினைக்கவொண்ணாது. இன்னதோர் நிலையில் இரஷ்ய சோவியத் அதிகாரிகளும் அவர்களைப்பார்த்து இங்கு நடிக்கின்ற சில சனங்களும் கழிந்திருந்த கடவுள்நினைவு மீண்டும் கைவருதற்குரியதோர் பேருதவி அவர் அறியாமலேனும் புரிபவர்களாகலாம். முன்னே இங்கு உரைத்தபடி ஒன்றை நாம் ஊன்றி நினையாமல் மறப்பதோ இயலாது. நாம் வெறுக்கின்ற ஒன்றினிடத்தில் நம்மனம் நாடுகின்ற அளவு விரும்புகின்றவைகளினிடத்தும் நாடுவதில்லை யென்னலாம். ஆதலால் ஒன்று நிச்சயம். கடவுளைப்பற்றி எவ்வித உணர்ச்சியும் இல்லாத அவ்வெண்ணிறந்த ஏனையோரைப்போலல்லாமல் கடவுளை மறக்கவும் வெறுக்கவும் பகைக்கவும் கற்கின்ற மாந்தர் அக்கடவுளை மறந்திலார். கடிகையொன்றிற்குள் பலமுறை அக் கடவுள்நினைவு வந்தே தீரல்வேண்டும். இன்னவகை நினைவில் ஓர் சிறப்புமுளது. கோயில்தோறும் சென்று தொழுதும், பூவும் நீருங் கொண்டு பரவியும் கடவுளை வழிபடுகின்றவர்களில் பதினாயிரத்தில் ஒருவர்தவிர ஏனையோர் அவ்வழிபாட்டு வேளையிலேனும் கடவுளை நினைக்கின்றார்களோ எனின் 'ஆம்' என்று துணிந்துகூறல் மிகவருமை. ஏனெனில் வரங்கள் சில வேண்டிச் செய்கின்ற வழிபாடுகளே அவை என்று இயம்பியபின் அவர்கருத்தினில் கடையிடமேனும் கடவுள் பெறுகின்றதோ என்ற ஐயம் எய்துவதில் வியப்பொன்றுமில்லையே. மனைவேண்டும், மக்கள்வேண்டும், பொருள்வேண்டும், உற்றநோய் தீரவேண்டும், தீதொன்றும் தன்னைச் சாராதிருக்கவேண்டும், என்று இன்னபல நினைத்துக் கேட்பதே தொழிலாதலின் அவருடைய மனத்தின்கண் நிரம்பி நிற்பவைதானும் தன்னலனும், தன்னுடையின்பமும், இவைகளுக்குரிய பொருள்களுமே யல்லால் கண்முன்னே நிற்கும் அத் திருச்சிலையின் உருவந்தானும் அவர் கருத்திலே படிவதற்கு இடமேனும் நேரமேனும் கிடைப்பது எங்ஙனம். மற்று, கடவுளை மறுத்துப் பழிப்பவர்களோ, வேண்டுவது இத்தகையது ஒன்றும் இல்லையாதலின் யாதும் கலவாத நினைவினாலேயே கடவுளைத் தம்கருத்தினுள் வைத்துக்கொள்கின்றவர் ஆவார்.

இது ஒன்று. இனி, இவர்கள் முயல்கின்ற இயக்கங்களோடு இணங்கியும் இகலியும் எழுகின்றவர்களுக்கும் இந்தச்செவ்வி எளிதில் வந்து வாய்க்கின்றது. கருத்திற்கு ஏற்றவாறு சொற்கள் அமையுமென்பது வெளிப்படை. மற்று, சொல்லிச்சொல்லி வருகின்ற சொற்களுக்கு ஏற்றவாறு கருத்தும் திரியும் என்பது மானதசாத்திரத்திற் கொவ்விய நுட்பங்களில் ஒன்றாகும். கடவுளென்ற நினைவு ஒருபோதுமில்லாதிருந்தவர்களும், நாத்திக இயக்கம் தலையெடுப்பது கண்டு வெகுண்டவர்போல் பாவித்து அன்னவர்க்கு மாறாகத் தாமும் சில இயக்கங்களைச் செலுத்தவேண்டும் என முயலப் புகுவதும் இயற்கையே. அப்படிப் புகுங்கால் அவர் கடவுள் இடத்தினின்று பெறவேண்டிய பொருள் யாதும் இலதாதலின் 'கடவுள் கடவுள்' என்று பல்கால் கழறிய சொற்கள் இறுதியில் கடவுளை மருவிய கருத்தேயாய் மாறுதற்கும் நெறியுளது. இவ்வாறெல்லாம் பார்க்குமிடத்து, எக்காரணத்தினாலேனும் என்—மனிதர் கடவுளைப்பற்றி முன்னினும் அதிகமாக நினைக்கின்ற ஓர் நிலை உண்டாகின்றது. நேயமுடன் கடவுளை வைத்திருக்கும் நினைவு உத்தமமாகின்றதேனும், கடவுளைப்பற்றி ஒன்றுமே நினைக்காமல் ஒழிகின்றதைக்காட்டினும், பழித்துப் பகைப்பதற்கேனும் நினைப்பது சிறிதளவு சிறப்புடைத்தென்றெண்ணுதல் கூடும். அந்நேர மளவேனும் மனிதன் தன்நயமும் பிறர்கேடுஞ் சூழாமலிருக்கின்றானன்றோ. அந் நேரமளவேனும் மனிதன் தன்னை மறந்திருக்கின்றான்.

கடவுளை மறுப்பதால் ஒருகால் எய்தவல்ல உறுதியின் சிற்றெல்லையிது. பேரெல்லைவேறு. கடவுளைமறுப்பவருடன் கலந்துகொண்டோ, அல்லது மறுப்பவரை வெறுத்து அவரை எதிர்த்தோ மனிதர் மெல்லமெல்ல இருதிறத்தவராகிப் பற்பல இயக்கங்களிலும் முயற்சிகளிலும் சொல்முழக்கங்களிலும் தம்முழுமனதையுஞ் செலுத்தத்தலைப்படுபவராவார். இதனில், கடவுளைமனிதர் அறவே மறந்திருந்த நிலைநீங்கி யக்கடவுளின் திருவுருவம் மனிதரது இதயத்தில் தோன்றியெழுநேரலாம் என்று எண்ணுவதற்கும் இடமுளது. நினைத்து நினைத்து நீங்காமல் நிலைத்துவிடுகின்ற எண்ணங்கள்தான் வரவர உணர்வுநிலையாகிவிடுகின்றன. மனத்தினுக்கோ எட்டாததேனும் அம்மனத்தைக் கதுவிய எண்ணங்களே உணர்வினுள் இறங்கியபின், அவ்வுணர்வி னுள்ளுணர்வாகி உதிக்கின்ற நீர்மையது கடவுளின் உருவம். இவ்வுருவம் முதலில் உதிப்பது அரிதினும் அரிதாகின்றதெனினும் ஒருகால் உதித்தபின் மறுபடி மறைதலென்பது அதனினும் அருமை. இதுவுமன்றி உதித்த இவ்வுரு நாளுக்குநாள் தெளிவும் ஒளியும் அதிக மதிகமாகத் திரண்டு வளர்வதுந் திண்ணம். ஆதலின் மனிதர் கடவுளின் உருவமே மருவியகருத்தினர் ஆகின்றார். "எவ்விதத்திலும் எக்காரணம் பற்றியேனும் சற்றே யான் உன் சிந்தனையுள் நுழைவதற்கோர் புழைவழி தந்திடுவாய். பிறகு யான் உன்னுயிரினிற் குயிராய் உணர்வினிற் குணர்வாய்ப் பாய்ந்துவிடமாட்டேனோ" என்று அற்றம் பார்த்திருப்பார்போல் காத்திருக்கின்றவக் கடவுள் செய்யுங் கள்ளமிது. களவாடியேனும் நம்மைத் தன்னுடைமை யாக்கிக்கொள்ள வேண்டுமென்று அவாவுகின்ற அக்கருணையின் திறம் மிகமிகப் பெரியது.

இப்படி, கடவுளென்ற வோர் நினைவே இல்லாதிருந்த நிலைநீங்கி, கடவுளைப் பகைத்தொரு சாராரும், பக்தியிலதேனும் பகைப்பவரைப் பகைப்பவராகிய மறுசாராரும் நாடோறும் நெடுநேரம் கடவுள் என்ற சொல்லைமட்டும் முதலினும், பிறகு அச்சொல்லால் பிறக்கும் கருத்தையும் தம்மகத்தே தாங்கியவராதல் வேண்டும். உள்ளத்தில் ஊன்றி உறைந்ததோர் உருவம் வெளிவந்து தோன்றுவது காதலுக்கு மட்டுமே உரியதோர் செய்தியன்று. எனின், மெல்லமெல்ல நிகிலப்பொருள்களில் கண்டனவெலாம் அவர்க்குக் கடவுளின் மோன உருவெளியாகத் தோன்றக்கூடிய வோர் செவ்வி வாய்க்கினும் வாய்க்கலாம். மதிகெட்டு இவர் கடவுளை மறக்க ஆரம்பித்தவர்கள் ஆனபோதினும் இறுதியில் கண்டவிடந்தோறும் கடவுளுருவத்தைக் கண்களால் காண்கின்ற உறுதி கைவரப்பெற்றதாயிற்று. எனின், மதியைக்கெடுத்த தெய்வம் கண்ணைக் கொடுப்பினும் கொடுக்கலாம் என்று எதிர்நோக்குவதில் விபரீதம் யாதுமில்லை. அந் நன்னம்பிக்கை, எம்[illegible]ணைக்கடலில் ஆழாது மிதந்து [illegible]வதே.

ஆண்டாள்

2. கல்வியும் கவித்திறமையும்.

[764-வது பக்கத் தொடர்ச்சி]

ஆண்டாள் விஸ்தாரகவியா என்பதைப்பற்றி ஆராய்வோம். விஸ்தாரகவி என்னும் அகலகவி ஆயிரக்கணக்கான செய்யுள் பாடினவர் என்பது சாதாரண அபிப்பிராயமாம். ஆயினும் நமதிலக்கணத்தில் விஸ்தாரகவி இத்துணைச் செய்யுள் செய்யவேண்டுமென்னும் நிபந்தனைக்கு உட்படவில்லை. ஒரு உலா * பாடினாலும் வித்தாரகவி யென்னலாகும். ஒரு கலம்பகம் பாடினாலும், காவியம்பாடியதுபோல் வித்தாரகவியென்று நமது தமிழ்ப்பாஷையில் பேரெடுக்கலாம். விஸ்தாரகவி தொடர்நிலைச்செய்யுளாயும், தனிநிலைச் † செய்யுளாயும் இருக்கக்கூடும். ஆயினும் அகலகவிக்கு இன்றியமையா இலக்கணம், எழுதும் நூலில் தலைவன் தலைவிக்குத் தசப்பொருத்தமும் போற்றலேயாம். இவை யமையப்பெறின், கவியின் மனம் அகன்றிருக்குமாதலால், நூலின் அளவையேனும் செய்யுட்களின் அளவையேனுங் கருதாது, அக் கவியை விஸ்தாரகவியென்பர் மேலோர். அத்தகைய பொருத்தம் பத்தும் பழுதின்றிவிளங்குவதால் ஆண்டாள்விஸ்தாரகவி யாவார்.

ஆண்டாள் பாடிய செய்யுள் மொத்தம் 173. திருப்பாவையையும் 14 திருமொழிகளையும் ஒருங்கு சேர்த்துத் தொகைபடுசெய்யுள் யாவும் காப்பிய விலக்கணங் காட்டுகின்றன. ஒவ்வொரு திருமொழியும் ஒவ்வொரு படலமாய் எடுப்பின் விஷ்ணுபுராணப் பெருங்காப்பியம் எனினும் பொருந்தும். தண்டியாசிரியர் பெருங்காப்பிய விலக்கணம் வரையறுப்பது காண்க:—

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

தண்டியலங்காரம் - 8.

இச் சூத்திரத்திற் கூறிய அங்கங்கள் ஒவ்வொன்றெடுத்து அற்கு உதாரணம் ஆண்டாள் திருப்பதிகங்களி லுளவோ என்பதைக் காண்போம்:—

i. வாழ்த்து வணக்கம் வருபொருள் (மூன்றுக்கும் உதாரணம்): —

விண்ணுற நீண்டடி தாவியமைந்தனை
வேற்கண் மடந்தை விரும்பிக்
கண்ணுற வென்கடல் வண்ணனைக்
கூவுகருங் குயிலே யென்றமாற்றம்
பண்ணுறு நான்மறையோர் புதுவை
மன்னன் பட்டர்பிரான் கோதைசொன்ன
நண்ணுறு வாசகமாலை வல்லோர்
நமோ நாராயண வென்பாரே.

5-வது திருமொழி (மன்னுபெரும்புகழ்) - 11.

(ii) நாற்போருள் பயக்கும் நடைநெறி:—

1 அறம்:—(இல்லறம் துறவறமென இரண்டாம். இவ்விரண்டிற்கும் ஒரே உதாரணம் கீழ் வருமாறு:-) [ஈதல்-அறம்]

அங்கைத் தலத்திடை யாழி கொண்டா
னவன்முகத் தன்றிவிழியே னென்று
செங்கச்சு கொண்டு கண்ணாடையார்த்துச்
சிறுமானிடவரைக் காணில் நாணும்
கொங்கைத் தலமிவை நோக்கிக்காணீர்
கோவிந்தனுக் கல்லால் வாயில்போக
இங்குத்தை வாழ்வை யொழியவேபோய்
யமுனைக்கரைக் கென்னை யுய்த்திடுமின்.

12-வது திருமொழி (மற்றிருந்தீர்) 4

2. பொருள்:-(தீவினையின்றி ஈட்டுவதே பொருள்).

வாரண மாயிரம் சூழவ லஞ்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரண நாட்டக் கனாக்கண்டேன் தோழிநான்.

6-வது திருமொழி 1.

3. இன்பம்:—(காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபடுதல்):—

வெற்றிக் கருளக் கொடியான்தன்
மீமீ தாடா வுலகத்து
வெற்றி வெறிதே பெற்றதாய்
வேம்பே யாக வளர்த்தாளே
குற்ற மற்ற முலைதன்னைக்
குமரன் கோலப் பணைத்தோளோ
டற்ற குற்ற மவைதீர
அணைய வமுக்கிக் கட்டீரே.

13-வது திருமொழி (கண்ணனென்னும்) 7.

* வளமட லுலாமட லுலாவனு ராக
மாலைமெய்க் கீர்த்தி புகழ்ச்சி மாலை
நாம மாலை தாரகை மாலை
யுற்பவ மாலை தானை மாலை
வரலாற்று வஞ்சி செருக்கள வஞ்சி
பலபொருள் வஞ்சி நிலைபெறு குழமகன்
பாதாதி கேசம் கேசாதி பாத
மூவாத்தொழில் கூத்தர் முதலோர் தம்மை
யாற்றுப் படுத்தல் தூதாகு மிருதிணை
போற்றுமஞ் சரியெனப் புலவர் நிலைபெறச்
சாற்றப் படுமத் தனிநிலைச் செய்யுள்.

இலக்கணவிளக்கம் 855.

† மங்கலம் சொற்பால் வருணம் உண்டி
தானம் அக்கரம்நான் தப்பாக் கதிகணம்
ஆன ஈரைந்தும் அம்முதற் சீர்க்குப்
பொருத்த மென்னத் தெரித்தனர் புலவர்.

ஷை 770.

4. வீடு:—(பரனை நினைந்திம் மூன்றும் விட்டதே பேரின்பவீடு):—

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றமேய்த் துண்ணும் குலத்திற் பிறந்துநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கு முன்றன்னோ
டுற்றோமே யாவோ முனக்கோநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை 29.

(iii) தன்னிகரில்லாத் தலைவன்:—

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பன்ன நின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை 25.

(iv) மலை:—(கோவர்த்தனம், வேங்கடம்).

"..............காலிக ளுய்ய மழைதடுத்துக்
கொற்றக் குடையா வேந்திநின்ற
கோவர்த் தனத்தென் னையுய்த்திடுமின்

12-வது திருமொழி 8.

குளிரருவி வேங்கடத்துக் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள் ஆவிகாத் திருப்பேனே.

8-வது திருமொழி 3.

(v) கடல்:—(பாற்கடல்)

"............பாற்கட லுள்
பையத்துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம்........"

திருப்பாவை 2.

கடலே கடலே யுன்னைக்கடைந்து கலக்குறுத்து
உடலுட்புகுந்து நின்றூறலறுத்தவற் கென்னையும்
உடலுட்புகுந்து நின்றூறலறுக்கின்ற மாயற்கென்
நடலைகளெல்லாம் நாகணைக்கே சென்றுரைத்தியே.

10-வது திருமொழி 9.

(vi) நாடு:—(வேங்கடநாடு: இதன் வர்ணனை மேக விடுதூதிற் காண்க)

பாடும் குயில்காள் ஈதென்னபாடல் நல்வேங்கட
நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்.

10-வது திருமொழி 5.

(vii) நகர்:—(வடமதுரை, துவாரகை)

மாட மாளிகை சூழ் மதுராபுரி
நாடிநந் தெருவின்நடு வேவந்திட்
டோடை மாமத யானையு தைத்தவன்
கூடு மாகில்நீ கூடிடு கூடலே.

4-வது திருமொழி (தெள்ளியார் பலர்) 5.

சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்துதோன்றும்
துவராபதிக் கென்னை யுய்த்திடுமின்.

12-வது திருமொழி 9.

(viii) பருவம்:—(ஐந்திணையில் பெரும்பொழுது சிறுபொழுதெனக் காட்டியஉதாரணங்களைநோக்குக)

(ix) இருசுடர்த் தோற்றம் (சூரியன் சந்திரன்):—

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலச்
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கணிரண்டுங் கொண்டெங்கள்மேல் நல்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை 22.

(x) நன்மணம் புணர்தல்:—

நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடை பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பதோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழிநான். (2)

இந்திர னுள்ளிட்ட தேவர்குழா மெல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திர கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழிநான். (3)

நாற்றிசை தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கிப்
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லோ ரெடுத்தேத்திப்
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னைக்
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழிநான். (4)

குங்கும மப்பிக் குளிர்சாந்த மட்டித்து
மங்கல வீதி வலஞ்செய்து மணநீர்
அங்கவ னோடுடன் சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழிநான். (10)

6-வது திருமொழி (வாரணமாயிரம்)

(xi) பொன்முடி கவித்தல்:—

அற்ற வன்மரு தம்மு றியநடை
கற்ற வன்கஞ் சனைவஞ் சனையின்
செற்ற வன்திக ழும்மது ரைப்பதிக்
கொற்ற வன்வரில் கூடிடு கூடலே.

4-வது திருமொழி (தெள்ளியார் பலர்) 6

(xii) பூம்பொழி லுகர்தல்:—

தெள்ளி யார்பலர் கைதொழுந் தேவனார்
வள்ளல் மாலிருஞ் சோலை மணாளனார்
பள்ளி கொள்ளு மிடத்தடி கொட்டிடக்
கொள்ளு மாகில்நீ கூடிடு கூடலே.

4-வது திருமொழி 1.

(xiii) புனல் விளையாடல்:—

எல்லே ஈதென்ன விளமை
எம்மனைமார் காணி லொட்டார்
பொல்லாங் கீதென்று கருதாய்
பூங்குருந் தேறி யிருத்தி
வில்லா லிலங்கை யழித்தாய்நீ
வேண்டிய தெல்லாந் தருவோம்
பல்லோரும் காணமே போவோம்
பட்டைப் பணித்தரு ளாயே.

3-வது திருமொழி (கோழியழைப்பதன்) 8.

(xiv) சிறுவரைப் பெறுதல்:—

i........"கோதை சொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயு நன்மக்களைப் பெற்று மகிழ்வரே.

6-வது திருமொழி 11.

ii அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்துன் றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்.

திருப்பாவை 28.

(xv) புலவியிற் புலத்தல்:—

வண்ணந்திரிவும் மனங்குழைவும்
மானமிலாமையும் வாய்வெளுப்பும்
உண்ண லுறாமையு முள்மெலிவும்
ஓதநீர்வண்ண னென்பானொருவன்
தண்ணந் துழாயென்னும் மாலைகொண்டு
சூட்டத்தணியும் பிலம்பன் றன்னைப்
பண்ணழியப்பல தேவன்வென்ற
பாண்டிவடத்தென்னை யுய்த்திடுமின்.

12-வது திருமொழி (மற்றிருந்தீர்) 7.

(xvi) கலவியிற் களித்தல்:—

குத்துவிளக் கெரியக் கோட்டுக்கால் கட்டின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை 19.

(xvii) மந்திரம்:—

உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே
பெண்படையாருன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்
பண்பல செய்கின்றாய் பாஞ்ச சன்னியமே.

7-வது திருமொழி (கருப்பூரம் நாறுமோ). 8.

(xviii) தூது:—மேகவிடுதூது.

(8-வது திருமொழி).

(xix) இகல் வென்றி:—

எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ
சில்லென்றழையேன்மின் நங்கைமீர் போதருகின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தானாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை 15.

(xx) சந்தியிற்றொடர்தல் நாடகத்தில் வித்தல், விளைத்தல் விளைவுதுய்த்தல். இது நாச்சியார் நாடகத் தமிழில் பின்னே வரும்.

(xxi) சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பாகுபாட்டுக் கொப்பன ஒவ்வொரு திருமொழியிலும் உள்ள செய்யுட்களாம்.

இவ்வாறு காவிய இலக்கணங்கள் ஒவ்வொன்றும் விரித்துக்காட்டாவிடினும் அவை குறிப்பால் மேற் கண்டவாறு ஆண்டாள் திருப்பதிகங்களிற் காணப் படுவதால் காவியஇலக்கணம் யாவும் கோதையார் அமையப் பாடினார் என்னலாம். ஆனால் வைகுண்டத் தில் சதாத்யோக நித்திரையிலுள்ள பெருமான் ஆங் காங்குத் தீங்கொழுகாவண்ணம் தடைசெய்யத் திருவ வதாரம் செய்தும், செய்யவுத்தேசித்து மிருப்பதால், அத்தகைத் திருவவதார மூர்த்திகளைக் கதாநாயகராய் அமைத்து அவர்கள் திருவிளையாடல்களைக்காட்டியும், இம்மூர்த்திகளனைவரும் ஏகமூர்த்தியாதலாலே அம் மங்களாகார குணங்களை ஆங்காங்குவெளிப்படுத்தியும் நாற்பொருள் பயத்தலால், இவ்வம்மையார் பாடியுள பதிகங்கள் முற்றும் ஒரு காவியமாகுமென்றும், அது விஷ்ணுபுராண காவியமென்றும் கொள்ளலாகும். ஆதலால் கோதையார் ஆசுகவியாவதுடன் அகலகவியு மாயின ரென்ப. இவர் 4-ம் திருமொழி (தெள்ளியார் பலர்) மதுரகவியிற் சிறந்ததென்றோம். அத்துடன் இவர் விஸ்தாரகவியுமாவார். அத்தகைய ஆற்றல் * பெற்று முத்தமிழ்ச் செல்வராய் நிறைந்து விளங்கினார்.

* கற்கப் படுவோர் கடப்பா டெய்தி
நற்கவி நான்கொடு முத்தமிழ் நடைதெரிந்
திருபான் வயது தொடங்கி யெழுபான்
வயதி னேறு மாட்சிமை யுள்ளோ
னகல கவிசொலு மாற்ற லோனே.

இலக்கணவிளக்கம் 938.

சிதம்பரதேவர் சரிதம்.

[770-வது பக்கத் தொடர்ச்சி]

14. புத்திர உற்பத்தி.

சாமி! தெண்டம், தெண்டம்; கும்பிடு போடுகிறேன். நம்ம ராசாவுக்கு இண்ணைக்குச் சூரியன் வர வேளைக்கு ஆம்பிள்ளை பொறந்தது எல்லாரும் தெருவுகளை அலங்காரம்செய்து தோரணங்கட்டி வெளக்கு வைத்து ஏழை எளிபதுகளுக்கு அன்னதானம் வஸ்திரதானம் கொடுத்துக் கோவில்களிலும் வீடுகளிலும் பூசைகள்செய்து சந்தோஷம்கொண்டாட நம்பெரிய மந்திரி உத்திரவு செய்திருக்கிறார். திடம், திடம், திடம்." இவ்வாறு ஒருவன் தெருத்தெருவாய்ப் பறையடித்துச்செல்லப் பிரஜைகள் யாவரும் சந்தோஷங் கொண்டு பட்டணமெங்கும் அலங்கரித்து உற்சவங் கொண்டாடினார்கள். இரண்டு நாட்களுக்குள் தம் மந்திரிக்கும் ஓர் ஆண்பிள்ளை பிறந்ததென்பதையுணர்ந்து குடிகள் மகிழ்ந்திருந்தனர். அரசன் ஆனந்த மேலீட்டால் விஸ்வநாதீஸ்வரரைப் பலவாறு போற்றி மனமுருகப் பாடித் துதித்து அளவற்ற திரவியங்களைத் தானஞ்செய்து ஆலயங்கட்கு உற்சவம் நடப்பித்து மனங்களித்திருந்தான்.

இராஜபத்னிகள் புதல்வனை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து ஆனந்தித்து யாதொரு குறைவுமின்றிப் பாதுகாத்து வந்தனர். மந்திரிகுமாரனு மப்படியே அன்புடன் வளர்ந்துவந்தான். விக்ரமசேனன், மாளவதேச பூபதிக்கும் மற்றத் தேசத் தரசர்கட்கும், அரசனுக்குப் புத்திரனுற்பத்தியான சந்தோஷ சமாசாரத்தைத் தூதுவரை விட்டுத் தெரிவித்தான். மஹாதேவர் புத்திரனுதித்த தினத்தில் கோமளாங்கனும் விக்ரமகேதுவும் சிறைச்சாலையில் சுரங்கம் செய்து தப்பித்துச் சென்றனரென்று முதன் மந்திரி மூலமாய் அரசனுக்குத் தெரிவிக்க அரசன் புதல்வன் ஜனித்த களிப்பால் அவர்களை மன்னித்து மற்றவர்களையும் சிறைமீட்டு அவ்வரசர்கட்குத் தக்க மரியாதைசெய்து அனுப்ப உத்திரவளித்தான்.

இராஜபுத்திரனுக்கும் மந்திரியின் புதல்வனுக்கும் நல்ல சுபதினத்தில் நாமகரணஞ் செய்யவெண்ணி அரசன், தன் புதல்வனுக்குச் சிதம்பரசேகரப் பெருமாள் என்றும், மந்திரியின் குமாரனுக்குப் புகழேந்தி யென்றும்பெயர்களிட்டு அழைத்தனன். இருகுழந்தைகளும் ஒன்றுக்கொன்று அன்புபாராட்டி விளையாடிவர ஐந்தா மாண்டில் நல்ல அறிவாளராய ஓர் உபாத்தியாயரை நியமித்து வித்யாப்பியாசம் செய்வித்தனர். இருகுழந்தைகளும் கடவுளருள்பெற்று அதிதுரிதமாய் அதிநுட்ப வித்தைகளையும் கிரகித்து அஸ்தர சஸ்திரப் பிரயோகங்கள் யானையேற்றம் குதிரையேற்றம் முதலியவற்றையுங் கற்றுத் தேர்ந்தனர். சிதம்பரன் பிரம்ம வித்தைகள் கற்பதில் அதிக சிரமமெடுத்து உபாத்தியாயர் வியக்கும்படி விசாரணை செய்துவந்தான். கடைசியாய் உபாத்தியாயர் சிதம்பரனை அழைத்து, 'ஓ, பிள்ளாய்! உன் புத்தி பிரம்மவித்தையில் அதிதீக்ஷண்யமாயிருக்கிறது. இனி என்னுலுனக்கு இவ்விஷயத்தில் கற்பிப்பதொன்றுமில்லை. யான் அறிந்த மட்டுஞ் சொன்னேன். உன் பூர்வஜன்ம கர்மானுபவத்தால் யாரேனும் ஓர் ஜீவன்முத்தனை யடுத்து நிவர்த்தி தேடிக்கொள்'' என்றுரைத்து அரசனை நாடிச் சீடர்கட்குக் கற்பித்த வித்தைகள் யாவையும் காண்பித்துப் பரிசுபெற்று ஆனந்த சித்தராய்த் தமது இருப்பிடம் செல்ல விடைபெற்று அரசனைத்தனியாய் அழைத்துச் ''சிதம்பரன் பிரம்மவித்தை கற்பதில் அதிக தீக்ஷண்யமா யிருப்பதால் ஜாக்ருதையாயிருக்கவேண்டும்'' என்று குறிப்பாய் உணர்த்திச் சென்றனர். சிலநாட்சென்று அரசன் தேசதேசத் தரசர்களுக்கெல்லாந் தெரிவித்துச் சர்வ ஆடம்பரத்துடன் தனது குமாரனுக்கு இளவரசுபட்டம் கட்டி மகிழ்ந்தான்.

சிதம்பரனும் புகழேந்தியும் ஒருவருக் கொருவர் வித்தியாசமின்றி அன்புபாராட்டிச் சகோதரர்களைப் போல் ஒற்றுமையுடன் வளர்ந்துவந்தனர். ஒருநாள் சிதம்பரனும் புகழேந்தியும் இராஜசபை செல்ல அரசன் எதிர்சென்றழைத்துக் ''கண்மணிகளா, இன்று நீங்களிருவரும் விஜயம் செய்ததால் இச்சபை தேவேந்திர சபைபோல் அலங்காரமா யிருக்கிறது'' என்று புகழ்ந்து ''கடவுளுங்களுக்குத் தீர்க்காயுள் கொடுப்பாராக'' வென்று ஆசிகூறி உள்ளங்கரைந்து மாலை மாலையாய்க் கண்ணீருதிர்த்தான். மிகவும் ஆர்வத்துடன் தன்னை வாரியெடுத்து முத்தமிட்டும் துக்கம்பெருகுவதைச் சிதம்பரன் கண்டு கலக்கமுற்று ''அன்பான தந்தையே இன்று நாங்கள் இச்சபைக்கு என்ன முகூர்த்தத்தில் வந்தோம்? எங்களைப் பார்த்து அடங்காச் சந்தோஷம் கொண்ட தாங்கள் இப்படி ஆற்றொணுத துன்பத்தில் அழுந்த காரணமேது'' என்றுவினவினன்.

குலசேகரன் :—அப்பா குழந்தாய், எனக்குச் சந்தோஷ மேலீட்டாற் கண்ணில் ஜலம் வந்ததே தவிர மற்றென்றுமில்லை.

சிதம்பரன் :—தந்தையே, இப்போதும் துக்கிக்கிறீர்கள். ஏதோ என்விஷயமாய்த்தான் துயரப்படுவதாய்த் தெரிகின்றது. சொன்னுலொழிய மனமாறேன்.

குலசே :—உனக்கு உண்மையை மறைத்துக் கூறுவதிற் பயனில்லை. இவ்வளவு அழகும் கல்விப்பயிற்சியுமுடைய ஓர் மகவையளித்த பராபரமூர்த்தி சொற்ப ஆயுளைக் கொடுத்தமையால் அதை நினைத்தேன்; துக்கம் மேலிட்டது.

சிதம்:—ஆஹா, பிதாவே, இதற்கோ எல்லா முணர்ந்தமண்டலாதிபனுனதேவரீர் துக்கிப்பது. அற்பமும் அனித்யமுமான இத்தேகம் நிஜமானதல்லவே. இதனகத்தேகுடிகொண்ட தேகி நீங்கில் நாய் நரி முதலிய பிராணிகட் கிரையாவதன்றோ? இதற்காக வருந்துவது நீதியோ? இதிருக்கட்டும். ''அற்பஆயுளைக் கடவுள் கொடுத்தார்'' என்றீர்களே, அந்தவிசேஷத்தைச் சற்றே தெரிவிக்கவேண்டும்.

குலசே :—குழந்தாய் ஓர் ஆண்மகவுக்காகக் காலகாலனைக் குறித்துநான் பெருந்தவமிருக்க அவர் ஓர்சந்நியாசியாய்த் தோன்றி ''ஞானவானுய்ச் சர்வ லட்சணங்களுமமைந்த ஓர் குழந்தையை அளித்தோம், ஆனுல் அவன் இருபத்திரண்டாமாண்டில் சத்துருவாற்கொலை செய்யப்படுவான். அப்போது ஜீவன்முத்தன் ஒருவன் உதவிபுரியின்நின்மகன் நீடூழிவாழ்வன்'' என்றுரைத்து மறைந்தார். உனக்கோ இப்போது பதினறு ஆண்டுகளுமாயின. இனி ஆருண்டுகளுக்குள் எல்லா நற்குணங்களு மமைந்த மகவையிழந்து நான் மலடாயிருக்க வேண்டுமே கடவுளே, என்று நினைத்தேன். துக்கம் மேலிட்டது. சிசுவே எல்லாம் சிவன்செயல்.

சிதம்பர :—பிதாவே, கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற் போலானது. தேவரீரிடம் விடைபெற்றுத் தேசாந்திரஞ் சென்று தேவாலயங்கள் தேடித் திரிந்து சித்தசுத்திபெற அனுமதி கேட்கவந்தேன். என் இரகசியத்தைச்செப்பியது மிகவும் நன்மை. இதுவும் கடவுள் செயலே. தேக மிருக்கும்போதே மோக்ஷத்தைத் தேடவேண்டியதால் தடைசொல்லாமல் தீர்த்தயாத்திரைசெய்ய விடைதரவேண்டும்.

குலசே :—அப்பா, இனி ஆறுவருடமேனும் என்னுடன் கூடியிருப்பாய், அதற்குள் என் பிராணன் நீங்காதா என்றிருந்தேன். இப்போதே தவத்திற்குப் போகிறேனென்றுய். ஒன்றுமறியாப் பாலகனுயிற்றே! தேசாந்திரம் போம்படி எண்ணலாமா?

சிதம்பர:—தந்தையே, சுவரிருக்கும் போதல்லவோ சித்திர மெழுதவேண்டும்? ஆறு வருடங்கள் ஆறு நிமிஷமாய் விடுமே பிறகு செய்வது யாது? இதற்கு முன் என் இரகஸியத்தைக் கூருமற்போனீர்களே? இப்போதாவது முயன்றுலல்லவோ இனி ஒரு ஜன்மத்திலேனும் கதியடையலாம். இது காதலா மலகமல்லவோ? போய்வருகிறேன்.

குலசேகரன் என்னபுகன்றும் ஓரே பிடிவாதமாய்ச் சாதித்து விடைபெற்றுத் தாய்மார்களை நாடிச்சென்று விடைதர வேண்டுமென்றனன். இந்திரலேகை யாதுபுகன்றும் கேளாமல் அஷ்டாங்க பஞ்சாங்கமாய் நமஸ்கரித்து, ''இனி ஒரு நிமிஷமேனும் என்காலத்தை வீண்போக்கேன்'' என்று கூறி வெளிப்பட்டான். புகழேந்தி தன்தாய்தந்தையரை வணங்கி அரசகுமாரனுடன்செல்ல விடைகேட்க, அவர்களும் உவகை எய்தி ''மைந்தா, சிதம்பரனை ஒருபோதும் பிரிந்திராதே. உன்னுலான உதவிசெய்து பாதுகாத்து வருவாயாக. பிறகு கடவுளிச்சை'' என்றுரைத்து மகனைத் தழுவி விடைகொடுத்தனர். புகழேந்தி சிதம்பரனைச் சந்தித்துத் தான் விடைபெற்று அவனைத்தொடர்ந்து

செல்ல உறுதிகொண்டதைத் தெரிவித்து இருவரும் தீர்த்தயாத்திரைசெய்து ஆலயங்களைத் தேடி நடந்தார்.

15. விக்ரமகேது.

இரவில் வனத்திற் கோமளாங்கனை விட்டகன்ற விக்ரமகேது உருவையும் பேரையும் மாற்றிக் காடுவனந்திரங்கள் கடந்து பகலில் வெளிப்படாமல் இரவிலேயே சஞ்சரித்துக் கீழ்த்திசைநோக்கி இரண்டு மூன்றுமாதங்கள் அலைந்து திரிந்து கடைசியாய் ஓர் பெரிய பட்டணஞ் சென்றுன். அங்கு நிலைத்திருக்க எண்ணிப் பிக்ஷையேற்றுங் கூலிவேலைசெய்தும் நாட்கழித்துவருங்கால் ஒருநாள் அவ்வூர் அரசன் தன் குமாரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாகவும் ஏழைகட்கு அன்னவஸ்திர மளிப்பதாகவும் பறையறைவிக்சக் கேட்டு ஒரு நூதனவேஷத்துடன் ஏழைகள் கூட்டத்திற்கலந்து அங்கு நடந்துகொண்டிருக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். பட்டாபிஷேகமான புது அரசனும் சகோதரனும் மனைவிகளுடன் ஊர்கோலம் வந்துகொண்டிருந்தார்கள். விக்ரமகேது மற்ற ஏழைகளுடன் அன்னவஸ்திரங்கள் மனங்குளிர அளிக்கப்பெற்று ஊர்கோல கோஷம் பிறக்குமிடம் தேடிச் செல்கையில் இரதம் தன்னெதிரே வரக்கண்டு சற்று நின்று கவனிக்கையில் இரதம் தன்னருகில்வரத் திடுக்கிட்டு முகத்தை வஸ்திரத்தால் மறைத்து அவ்வஸ்திரம் வழியாய் இரதத்திலிருப்பவர்களைப் பார்ப்பதும் தலைகுனிந்து சுற்றி நிற்பவர்களிடையில் மறைவதுமாயிருந்து இனி இப்பட்டணம் விட்டுக் கடிதில்வேறிடம் போகவேண்டுமென்றுஓடத் தலைப்பட்டான்.

இவன் பரபரப்பையும் மருட்சியையுந் தன்னை மறைத்துக்கொள்ளும் பல சேஷ்டைகளையும் அருகில் நின்றவர்கள் பார்த்துச் சந்தேகித்து ஏதோ கபடனைப் போலிருக்கின்ற இவன் ஓடவும் தலைப்பட்டான் என்றுச்சரியப்படும்போது அவன் அதிகதூரம் செல்லா முன் ஓர் சேவகன் அவனைப் பிடித்திழுத்து, ''என்ன மிக அவசரமாய்ப்போகிருய்? வேடிக்கை பார்த்திருந்தவுனக்குச் சஞ்சலமும் சந்தேகமு முண்டாவானேன்; எங்கள் தலைவனிடம் போவோம் வா'' என்றழைத்தான். ''நான் ஒரு ஏழை, ஒருகுற்றமுஞ்செய்யவில்லை'' என்று மறுத்தாலும் சேவகன் விடாமற்பிடித்திழுத்து வாதாடுவதையும் சனங்கள்சூழ்ந்திருப்பதையும் இரதத்திலிருப்பவர்கள் கண்டு ''அவனைத் தொந்திரவு செய்யாது அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்றுத்திரவளித்தனர். விக்ரமகேது மிகப்பயந்து தனது துர்அதிர்ஷ்டத்திற்கு வருந்திப் பலவாறு சிந்தித்துக்கொண்டு சேவகர்களுடன் அரசசபை செல்லவே தன்னை அந்தப்புரத்தில் பட்டமஹிஷிகளிடமனுப்பக் கட்டளையிட்டதுந் தன்னைத் தெரிந்ததனுற்றுன் அந்தப்புரத்திற் கனுப்பினுர்களென்று முன்னினும் அதிகம் நடுங்கித் திகிலடைந்து இராஜ குமாரிகளின் முன் நின்றுன். காந்திமதி சேவகர்களைப் போகச்செய்து, ''ஓ விக்ரமகேது நீ சிறையினின்று எப்போது எப்படித் தப்பித்து வந்தாய்; ஒளியாமற் சொல். அன்றேல் உன் உயிர் தப்பாது'' என்றுள்.

இதைக்கேட்டுச் சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்து, நின்றது நின்றபடியே மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்தான்.

மூர்ச்சை நீங்கி யெழுந்து காந்திமதியின் பாதத்தில் வீழ்ந்து, ''அம்மணீ! என்னை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன். நான் உங்களுக்குச் செய்த துரோகத்திற்கு அதிகமாய்த் தண்டனை யனுபவித்தேன். இனிஎன்பிராணனுள்ளளவும் தங்களுக்கும் தங்கள் பிதாவிற்கும் வஞ்சனை நினையேன். இரக்ஷிக்க வேண்டும்'' என்று கூறித் தன் விருத்தாந்தத்தைச் சொல்வானுகி, நடுக்கத்துடன் சிறைச்சாலையில் நின்று கோமளாங்கனுடன் வெளிப்போந்து பிறகு அவனை விட்டகன்றது முதல் யாவற்றையும் தெரிவித்து ''அடியேன்மீது கருணைகூர்ந்து இரக்ஷிக்கவேண்டும்'' என்றுமறுபடியும்அவன் வணங்கவே, 'இவ்வளவு பிராணபயமுடைய நீ இங்கு வந்தவுடன் இவ்வூர் அரசரையும் நடக்கும் விஷயங்களையும் தெரிந்து கொள்ளவில்லையா'' வென, ''இது மாளவதேசமென்றும் அரசன் புதல்வர்கள் இரண்டு தேவ கன்னிகைகளை யொத்த மாதுசிரோன்மணிகளை விவாகம் செய்தனர் என்றல்லாது பாலைவனப் பிரபுவின் கன்னிகா ரத்தினங்களை மணம்புரிந்தார் என்று அறிந்தால் அந்த க்ஷணமே இதை விட்டகன்றிருப்பேன். தீர விசாரித்தால் ஏதேனும் சந்தேகமுண்டாகலாமென்றெண்ணி மதியீனனுனேன். மௌனமாயிருந்து காலங் கழிப்பதே பெரிய வேலையாய்விட்டது. என்னை விட்டுவிட்டால் காற்றினுங் கடிதாய்ப் பறந்து ஓடிவிடுகின்றேன்'' என்றுன்.

காந்திமதி துக்கிப்பவர்களை முன் பார்த்தறியாளாகையால் அவனுக்குத் தைரியம் வரும்படி மிருதுவாய், ''நீ பயப்படவேண்டாம், உன்னை மன்னித்தோம். நீங்கள் சிறையில்நின்று தப்பித்துக்கொண்டோடிய தினமே எம்தந்தைக்கு ஆண்குழந்தைஉதித்தது. சிறையிலிருப்பவர்களையெல்லாம் மன்னித்துச் சிறைமீட்டார். நீங்களிருவரும் அப்போது அங்கிருப்பினும் மன்னித்திருப்பார். உன் வஞ்சனைக்காக நீ பரிதாபப்படுவதால் உன்னை இங்கேயே ஓர் உத்தியோகத்தில் அமரச் செய்வோம். இனிமேல் சற்புத்தியுடன் வாழ்வாயாக'' என்று அவனுக்கு ஆடையாபரணங்களளித்து அமுதூட்டி அரசசபைக்கு அனுப்பினுள். அரசனைப் பணிந்து உத்திரவை எதிர்பார்த்திருக்க, ''உன்னைப் பார்த்தவுடனே தெரிந்துகொண்டேன்; உன்வரலாறு யாவுமறிந்தேன். நீ புத்திசாலியென்று உணர்ந்தமையால் நமது தளத்தின் சேனுதிபதியின் கார்யதரிசியாய் நியமிக்கப்பட்டிருக்கிருய். இனிபாவது இராஜத்துரோகமின்றி நடந்துகொள்'' என்று அரசன் கூறினுன். விக்ரமகேது ஆனந்த பரவசனுய் அரசன் சன்னதியில் அஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, ''பிரபுவே தீராத பாதகம் நினைத்த என்னை என் அன்னைமார் மன்னித்ததுபோல் தாங்களும் மன்னித்து இப்பெரிய உத்தியோகமும் தரப்பெற்ற நன்றியை யான் கடவுள் சாக்ஷியாய்மறவேன். தருணம் வாய்க்கின் இந் நன்றி மறவாமையைப் புலப்படுத்தக் கடவுள் அனுக்கிரகிப்பாராக'' என்றுரைத்துத் தனக்கென்று விடுத்த விடுதி சென்று கடவுள்பால் அன்புபெருகி ஆனந்தக் கண்ணீர் ததும்பத் தனது வேலையில் பிரவேசித்து யாவருங் களிக்க நடந்துவந்தான்.

யாப்பிலக்கணம்

செய்யுள்—கலிப்பா

[774-வது பக்கத் தொடர்ச்சி]

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

தரவொன்றும், இரண்டு மூன்று அல்லது நான்கடிகளால் ஆகிய தாழிசை மூன்றும், தனிச்சொல் ஒன்றும், சுரிதகம் ஒன்றுமாகச் சேர்ந்துவருகின்ற கலிப்பா நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா ஆகுமாறு சென்றவாரம் கண்டோம். இவ்வுறுப்புக்களெல்லாம் இருப்பதுடன், தாழிசைகளுக்குப் பின் அம்போதரங்கம்என்னும் உறுப்பு வருமாயின் அப்பாட்டு அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா என அழைக்கப்படும்.

அம்போதரங்கம் என்னும் இவ்வுறுப்பின் இலக்கணத்தை முன்னரே உரைத்திருக்கின்றோம். அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, பெரும்பாலும், கடவுளைப் பரவிப் பாடப்படுவதாதலால், இவ்வம்போதரங்கம் என்னும் உறுப்பு அக்கடவுளின், ஆற்றல் குணம் செயல் முதலியவைகளைப் புகழ்கின்ற பாகமாகும். இப்படிப்புகழ்கின்ற அடிகள் வரவர அலைபோல் அளவிற்குறைந்துகொண்டுவருவதால் அதற்குஅம்போதரங்கம் (நீர் அலை) எனப்பெயராயிற்று. இதற்கு எண் என்ற பெயருமுளது. புகழிற்குரியதாய்ப் பாராட்டப்படுகின்ற பலவிடயங்களில் ஒவ்வொரு விடயத்தையுந் தனித்தனி கூறி முடிக்கின்ற அடிகளைத் தனித்தனி எண்களாகக் கொள்க. அவ்வாறு கொண்டக்கால் அம்போதரங்கம் என்னும் இவ்வுறுப்பு,பேரெண் அளவெண் இடையெண் சிற்றெண் என நான்கு எண்களைக் கொண்டு அமைவது புலப்படும்:—

i. பேரெண்:—என்பது, இரண்டிரண்டு நாற்சீரடிகளா லான இரண்டு அம்போதரங்கம்.
ii. அளவெண்:—என்பது, நாற்சீரடி ஒவ்வொன்று கொண்ட நான்கு அம்போதரங்கம்.
iii. இடையெண்:—முச்சீரடி ஒவ்வொன்று கொண்ட எட்டு அம்போதரங்கம்.
iv. சிற்றெண்:—இருசீரடி ஒவ்வொன்று கொண்ட பதினாறு அம்போதரங்கம்.

குறிப்பு:—இடையெண் எட்டும் சிற்றெண்பதினாறும் வருவதே சிறைப்புடைத்தாயினும் சில அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாக்களில் இடையெண் நான்கும் சிற்றெண் எட்டுமாய் வருதலுமுண்டு.

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

தரவு.

அண்டரண்ட பகிரண்ட முழுவதுமீன் றகத்தடக்கிக்
கொண்டபெரும் பாழினுக்கு ஞாங்கரதாய்க் குளிறுதிரை
மண்டுபெரும் புனல்விரைசைக் கப்புறத்தாய் மதிலங்தோய்
தொண்டரினம் பேரின்பத் துறைபயிலத் தாமத்து
எருணவியங் கதிருதைய மலகிறந்தோன் றியத்தொன்றாய்த்
திருமணிமண் டபத்தினுளிந் திரையுடன்வீற் றிருந்துளாய்.

[இது காய்ச்சீர்களும் கலித்தளைகளும் மிகுந்து
பெற்ற நாற்சீரடிகள் ஆறுடைய தரவு]

தாழிசை.

1

இலகியவான் சுடர்விளக்கி யெழுதருபல் பந்தமெனு
உலகொருநான் கினுமதன்க ணொருநால்வ ரெனும்படித்தாய்
நிலவலயத் தடைவடைவே நிரைத்துள்நீ விருமூன்றாஞ்
சலவியபாற் கடலரவிற் றுயிலுவந்த வொருமுதலாய்.

2

மீனுவ தாரமுதன் மேதினிமேல் வருகற்கி
தானுக வுனக்குமொரு தந்தைதா யுளவெனலாய்
ஊனுர்பைக் குரம்பையினு டுகந்தோறு முகந்தோறு
மானுதிங் கமைபருவத் தங்குமமை பவனுகி.

3

எழ்வகைத்தாய்நால்வகைத்தோற்றத்திசைந்துயினத்துள
மூழ்வகைத்தா யலம்போது மூயிர்கடொறும் பிரியாது [தம
வாழ்வகைத்தாய்ப் புனல்சொரிந்து மலர்தூவி வழிபடுதற்
காழ்கடற்பா ரடியவர்பா லங்கங் கமர்ந்துளாய்.

[இவை மூன்றும் நான்கடித் தாழிசைகள்.]

குறிப்பு:—பெரும்பான்மை தாழிசை மூன்றும் ஒரே பொருளை மூன்று விதமாய்த் தனித்தனி செப்புவனவாக அடுக்கி நிற்பதே அதன் இலக்கணமேனும், சிறுபான்மை அவை மூன்றும் ஒருபொருளைத் தொடர்ந்து முடியவுங் கூடும் என்பதை இப்பாட்டுக் காட்டுகின்றது.

அம்போதரங்கம்.

பேரெண்:—

1. பேதைமையா லிறந்துபிறந் துழல்வனெனப் பேதுரூ
மூதறிவா ரழியாத முதல்வனெனத் தெரிந்துளாய்.
2. சாபத்தா லிழுக்கமுறாத் தலைமையாய்ச் சாபமடைந்
தாபத்தா யினர்சரண மடைதருமாங் கருள்புரிவாய்.

[இரண்டிரண்டடியில் பொருள் முற்றுவதால் பேரெண் எனப்படும் நாற்சீர் ஈரடி அம்போதரங்கம் இரண்டு.]

அளவெண்:—

1. வேதனுமுற் றுணர்வலெனி லறிவரிய மேன்மையாய்.
2. ஆதரவுற்றிடு மெளியர்க் கறிவெளிய பான்மையாய்.
3. நினைவர்தா நினைவுறுமவ் வுருவமதாய் வெளிநிற்பாய்.
4. அனைவருங்கண் டால்வியப்புற் றுசிபகர்ந் தெழுபொற்பாய்.

[அடிதோறும் ஒரு பொருள் முற்றுவதாய்
நாற்சீர் ஓரடி அம்போதரங்கம் நான்கு]

இடையெண் :—

1. திகிரியை யுயர்வலந் தரித்துளாய்.
2. திகழ்வரி வளையிடம் பரித்துளாய்.
3. புகர்முக மதமலை சொலச்செல்வாய்.
4. பொருமுத லையினுயிர் செலக்கொல்வாய்.
5. இரணியன் மார்பது பிளந்துளாய்.
6. இருநில மூவடி யளந்துளாய்.
7. அரணிய லார்கலி யடைத்துளாய்.
8. அதனிடை யேழ்மதிள் படைத்துளாய்.

[தனித்தனி அடியில் ஒவ்வோர் பொருள் முடிவனவாகி,
மூன்று சீர் ஓரடி அம்போதரங்கம் எட்டு.]

சிற்றெண் :—

1. தேனிமிர் துளபத்தாய்.
2. செனனம துளபத்தாய்.
3. ஈனர திடமெய்தாய்.
4. எழுமெழு மரமெய்தாய்.
5. அலகையி னுயிர்கொன்றாய்.
6. அறவல தருகொன்றாய்.
7. உலகம துறதுப்பாய்.
8. உரலிடை யடர்துப்பாய்.
9. மறைமொழி யினுமெட்டாய்.
10. வரைபொரு ளுரையெட்டாய்.

11. உறைதயி ரதுகட்டாய்.
12. உரைபுகழ் பலகட்டாய்.
13. அகன்மலை கவிகையுளாய்.
14. அழல்பெறு கவிகையுளாய்.
15. சகடம துதைமைந்தாய்.
16. தகவி னருண்மைந்தாய்.

[தனித்தனி பொருள் முடிகின்ற இருசீர் ஓரடி
அம்போதரங்கம் பதினாறு]

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்.

பரத்துவ முதலாய்ப் பரந்துள வைந்தாய்
வரத்துடன் மூவுரு வாகிய வரத
திருக்குரு கூரநின் திருவடி வழுத்துதும்
எங்கோன் திருமகிழ் மார்பின னியற்றமிழ்
ஊழிதோ றூழியெவ் வுலகினும்
வாழிய தாக வளர்க்கநீ யெனவே.

[இது ஆறடியால்வந்த நேரிசை ஆசிரியச் சுரிதகம்]

—மாறன் பாப் பாவினம்.

இனி, இடையெண் நான்கும் சிற்றெண் எட்டுமாய் வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு ஓர் உதாரணம் காண்போம்.

தரவு

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
ஆர்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்

தாழிசை

1

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ

2

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாறுதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கச்
சேனுய ரிருவிசும்பிற் சேர்த்ததுநின் சினமாமோ

3

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துதிறல் வேறாக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிசையாமோ

அம்போதரங்கம்

பேரெண்:—

1. இலங் கொளி மரகத மெழின்மிக வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்.
2. விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை.

அளவெண் :—

1. கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை.
2. தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை.
3. ஒலியிய லுவண மோங்கிய கொடியினை.
4. வலிமிகு சகட மாற்றிய வடியினை.

இடையெண் :—

1. போரவுணர்க் கடந்தோய் நீ.
2. புணர்மருதம் பிளந்தோய் நீ.
3. நீரகல மளந்தோய் நீ.
4. நிழறிகழும் படையோய் நீ.

சிற்றெண் :—

1. ஊழி நீ.	5. ஆழி நீ.
2. உலகு நீ.	6. அருளு நீ.
3. உருவும் நீ.	7. அறமு நீ.
4. அருவும் நீ.	8. மறமு நீ.

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்று முதிர்கட லுலக முழுதுடன்
ஒன்று திகிரி யுருட்டுவோ னெனவே.

—வளாக்காத்தனுர்.

குறிப்பு :— இடையெண்ணிலும் சிற்றெண்ணிலும், நீ என்ற ஓரசையே ஒரு சீராக நிற்றல் காண்க. வெண்பாவின் ஈற்றைப்போல் அசைச்சீர் வரும் இடங்களில் இதுவுமொன்று. மற்று, நீஇ என இதனை அளபெடுத்துங் கூறுவர் ஒரு சாரார்.

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவைப்போல் வெண்பாவைச் சுரிதகமுடைய அம்போதரங்கஒத்தாழிசைக் கலிப்பா யாம் கண்டவரையில் இலக்கியங்களில் தென்படவில்லை யாதலால், அவ்வாறு வர இயலுமோ என்பது ஐயத்திற் கிடனுகின்றது.

மாறன் பாப் பாவின நூலுடையார், நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவை அகநிலை ஒத்தாழிசைக் கலிப்பாவென்றும், அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவை வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவென்றும் அழைப்பர்.

இனி ஒருசா ராசிரியர் ஈரடி அராகம் ஒன்றுசேர்ந்து வருகின்ற அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பாக்கள் உளவென்றும், அவை தலையளவம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா, இடையளவம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா, கடையளவம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, என மூன்றுவகைப்படும் என்றும் கருதுவார். ஆயினும் அவைகளை நாமிங்கு ஆராய வேண்டுவதில்லை.

கலா நிலயம்.

1930-வருடத்திய இதழ்கள் இன்னும் சிலவே யிருக்கின்றன.
விவரம் 798-வது பக்கத்தில் பார்க்கவும்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[772-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

386. முன்னிய வுலகுகண் விடுத்த மூர்த்தியான்
மன்னிய திருமொழி யகத்து மாதராள்
என்னைகொல் விரிந்தவா றெனலு மன்னனுக்
கன்னவ னாதிமா புராணம் ஓதினான். 149.

முன்னிய உலகு கண் விடுத்த மூர்த்தியான்-உலகத்திலுள்ளவர்களின் கண்ணைத் திறந்துவைத்த அருகதேவனது, மன்னிய திருமொழி அகத்து - நிலைபெற்ற திருவாக்காகிய புராணத்தில், மாதராள் விரிந்தவாறு-இம்மங்கையின் திறம் விரிவாகக் கூறப்பட்டிருக்கும் விதம், என்னைகொல் என்னலும் - என்னவென்று கேட்கவும், அன்னவன் - நிமித்திகன், மன்னனுக்கு அரசனுக்கு. ஆதிமா புராணம் ஓதினான் - ஆதியாகிய பெரிய அந்தப் புராணத்திற் கூறிய வரலாறுகளைச் சுருக்கமாகச் சொல்லத் தொடங்கினான்.

கண்விடுத்தலாவது, அஞ்ஞானத்தைப் போக்கி உண்மையை உணரும் ஞானக்கண்ணைத் திறந்துவைத்தல்.

---

387. மூவகை யுலகினு ணடுவண் மூரிநீர்த்
தீவின தகலமுஞ் சிந்து வட்டமும்
ஓவல வொன்றுக்கொன் றிரட்டி கண்ணறை
ஏவலாய் விரிந்தவை யெண்ணி றந்தவே. 150.

ஏ வல்லாய் - அம்புகளை எய்யவல்லவனே, மூவகை உலகினுள் நடுவண் - மூன்றான உலகங்களுள் நடுவினதான,மூரிநீர்த் தீவினது அகலமும்-கடல் சூழ்ந்ததீவாகிய இந்தப் பூமியின் விஸ்தீரணமும்,சிந்துவட்டமும் - அக்கடலின் சுற்றளவும், ஓவு அல - நீங்குதலில்லாதனவாய், ஒன்றுக்கு ஒன்று இரட்டி - ஒன்றுக் கொன்று இருமடங்காக, கண்ணறை - அகலம், விரிந்தவை எண் இறந்த - விரிந்தவைகள் அளவற்றனவாம்.

மூரிநீர் - கடல். சிந்து - கடல். கண்ணறை - அகலம் (பிங்கலந்தை)

---

388. மந்தர நெடுமலை நடுவின் வாய்ந்தது
சுந்தர வேதிகை மருங்கு சூழ்ந்தது
நந்திய நளிசினை நாவன் மாமரம்
அந்தரத் துடையதிவ் வவனி வட்டமே. 151.

இ அவனி வட்டம்-இந்தப் பூகோளம், நடுவின் மந்திரம் நெடுமலை வாய்ந்தது - நடுவிடத்தில் மந்தரமலை நிற்கப்பெற்றதும்,சுந்தர வேதிகை மருங்கு சூழ்ந்தது-அழகிய சக்கரவாளகிரியாகிய மதிளால் நாற்புறமும் சூழப்பட்டதும், நந்திய நளிசினை நாவன்மாமரம்-செழித்துவளர்ந்த பெரிய நாகமரத்தை, அந்தரத்து உடையது-மலையின் உச்சியிலுடையதும் ஆனது.

மந்தரம் - மேரு, இமயம், மந்தரம், எல்லாம் ஓரே மலைத்தொடராதலின் ஒன்றின்பெயர் மற்றொன்றுக்கு வழங்கப்படுதலும் உண்டு.

---

389. குலகிரி யாறுகூர் கண்ட மேழ்குலாய்
மலைதிரை வளர்புன லேழி ரண்டதாய்க்
கொலைதரு வேலினாய் கூறப் பட்டதிவ்
வலைதிரை நெடுங்கட லவனி வட்டமே. 152.

கொலைதரு வேலினாய் - கொலைத்தொழிலுக்குக் காரணமாகிய வேலை யுடையவனே, இ-இந்த, அலை திரை நெடுங்கடல் அவனி வட்டம் - சஞ்சரிக்கின்ற அலைகளையுடைய நெடிய கடலாற் சூழப்பட்ட பூமண்டலம், குலகிரி ஆறு - பெரிய மலைகள் ஆறையும், கூர் கண்டம் ஏழிரண்டு - நிறைந்த கண்டங்கள் ஒன்பதையும், குலாய் மலை திரைவளர் ஏழ்புனல் அது ஆய் - குலாவி ஒன்றோடொன்று மலைகின்ற அலைகள் மேன்மேல் எழும்பிவருகின்ற கடல்கள் ஏழையும் உடையதாய், கூறப்பட்டது - சொல்லப்பட்டிருக்கின்றது.

“ கண்டமேழ்......புனல் ஏழிரண்டது” என்பதை ‘கண்டம் ஏழிரண்டு.........புனல் ஏழது’ என மாற்றிக்கொள்க. ஒன்பது கண்டங்களாவன :—1. வட விதேகம் 2. தென் விதேகம், 3. கீழ்பால் விதேகம், 4. மேல்பால் விதேகம் 5. வடஇரேவதம் 6. தென்னிரேவதம், 7. வடபாதம், 8. தென்பாதம், 9. மத்திமகண்டம்.

---

390. மாற்றவர் மண்டல மதனு ளூழியால்
ஏற்றிழி புடையன இரண்டு கண்டமாம்
தேற்றிய விரண்டினுந் தென்மு கத்தது
பாற்றரும் புகழினாய் பாத கண்டமே. 153.

பாற்ற அரும்புகழினாய்-போக்குதற்கரிய (நீங்காத) புகழை உடையவனே, மாற்று அவர் - நம்மின் வேற்றினத்தரான மனிதர் வாழும், மண்டலம் அதனுள் - மண்ணுலகத்தில், ஊழியால் ஏற்றம் இழிபு உடையன - யுகமாறுபாட்டால் உயர்வு தாழ்வுகளை உறுவனவாகிய, கண்டம் இரண்டாம் - கண்டங்கள் இரண்டாகும். தேற்றிய இரண்டினும் - சொல்லிய அவ்விரண்டினுள்ளும், தென் முகத்தது பாத கண்டம்-தென்திசையி லிருப்பது பாதகண்டம்.

மாறு அவர் - மாற்றவர். ஏற்று - (கடைக்குறை) ஏற்றம். தென்முகம், முகம் ஏழனுருபு. பாற்றுதல் - ஓட்டுதல், நீக்கல்.

---

391. மற்றது மணிமய மாகிக் கற்பகம்
பொற்றிர ளணிபொழிற் போக பூமியாய்
முற்றிய வூழிமூன் றேறி மீள்வழிப்
பிற்றகை யூழிவட் பிரமர் தோன்றினார். 154.

அது-அந்தப் பாதகண்டம், முற்றிய ஊழி மூன்று-கழிந்த மூன்று யுகங்களிலும், மணிமயமாகி - நவரத்னமயமாய்,பொன்திரள் அணி-தங்கத்திரளைக்கொண்ட, கற்பகம் பொழில் போகம் பூமியாய் - கற்பகச் சோலைகளையுடைய போகபூமியாய், ஏறி - மேம்பட்டு விளங்கி, பின் தகை ஊழ் மீள்வழி - பிந்திய நான்காம் யுகத்தில் தாழ்வையுற்று இழிந்தபோது, இவண் - இக்கண்டத்தில், பிரமர் தோன்றினார் - பல பிரமர்கள் தோன்றினார்கள். (மற்று - அசை.)

‘அது மணிமயமாகி, போக பூமியாய், ஏறி, மீள்வழி பிரமர் தோன்றினார்’ என வினைமுடிக்க, ஊழ் - ஊழி. போக பூமி - பிணி மூப்பு முதலிய துன்பங்களின்றி எவரும் என்றும் இன்பத்தையே நுகர்ந்து வாழும் இயல்பினதாகிய பூமி.

---

392. வெங்கதிர்ப் பரிதியும் விரவு தண்பனி
அங்கதிர் வளையமும் ஆதி யாயின
இங்கிவர் படைத்தனர் இழிந்த திவ்வகை
பொங்கிய புரவியாய் போக காலமே. 155.

பொங்கிய புரவியாய் - போரில் பொங்கியெழும் குதிரைப்படையை உடையவனே, இவர் - இந்தப் பிரமர்கள், இங்கு - இங்கே, வெம்கதிர் பரிதியும்-வெய்ய கதிர்களையுடைய சூரியனும், தண்பனி விரவு - குளிர்ந்த பனியோடு பொருந்திய, அம்கதிர் வளையமும் - குளிர்ந்த கதிர்களை உடைய சந்திரனும்,ஆதி ஆயின - முதலாகிய எல்லாவற்றையும், படைத்தனர் - உண்டாக்கினார். இவ்வகை இழிந்தது போக காலம் - இவ்வாறு போககாலம் மாறி இவ்வுலகம் இழிந்தது.

---

393. ஊழிமூன் றுவதோய்ந் திறுதி மன்னுயிர்
சூழ்துயர் பலகெடச் சோதி மூர்த்தியாய்
ஏழுய ருலகுடன் பரவ வீண்டருள்
ஆழியங் கிழமையெம் மடிக டோன்றினார் 156.

மூன்றுவது ஊழி ஓய்ந்த இறுதி - மூன்றும் யுகம் கழிய அதன் முடிவில், அருள் ஆழி அம் கிழமை எம் அடிகள் - அருள் வடிவமான அறவாழியை ஆளும் அழகிய உரிமையையுடைய எம்பிரானாகிய அருகதேவர், மன்னுயிர் சூழ்துயர் பலகெட - மன்னுயிர்களைப் பற்றிய பல துயரங்களும் ஒழியும்பொருட்டு, ஏழ் உயர் உலகு உடன் பரவ - மேலான ஏழுலகங்களும் ஒருங்கே தன்னைத் துதித்து வழிபட்டு உய்யுமாறு, சோதிமூர்த்தியாய் - அகண்ட சோதி வடிவுடன், ஈண்டு தோன்றினார் - இங்கே அவதரித்தார்.

---

394. ஆரு டழுவிய ஆழிக் காதியாம்
பேரருள் மருவிய பிரான்றன் சேவடி
காரிருள் கழிதரக் கண்க வின்றரோ
சீரருள் சரணென உலகஞ் சேர்ந்ததே. 157.

ஆர் அருள் தழுவிய ஆழிக்கு ஆதி ஆம் - ஆரக்கால்களாகக் கருணையே பொருந்திய சக்காயுதத்துக்கு ஆதி நாயகனாகிய, பேர் அருள் மருவிய - மிக்க கருணையோடு கூடிய, பிரான் தன் செம்மை அடி - தேவனுடைய செம்மை வாய்ந்த அடிகளே, கார் இருள் கழிதர கண் கவின்று - கரிய இருள் நீங்குமாறு ஒளிர்வுற்றுக் கண்ணுக்கு அழகாய், சீர் அருள்-முத்தியை அளிக்கும், சரண் என - அடைக்கலம்புகும் இடமென, உலகம் சேர்ந்தது - உயர்ந்தோரால் அடையப்பெற்றது.

செம்மை - குணச்செம்மையும் நிறச்செம்மையும். சீர் - ஆகுபெயர். “உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே”. உலகம் - மன் [illegible] என்றுமாம்.

18938

395. அலந்தவ ரழிபசி யகற்றும் வாயிலும்
குலங்களுங் குணங்களுங் கொணர்ந்து நாட்டி
புலங்கிளர் பொறிநுகர் விலாத புண்ணியன் [னன்
நலங்கிளர் திருமொழி நாதன் என்பவே. 158.

புலம்கிளர் - சப்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களாகிய தன்மாத்திரைகளினின்றுதோன்றிய (ஐம்பூதங்களின் காரியமாகிய), பொறி நுகர்வு இல்லாத புண்ணியன் - இந்திரியங்களால் உணரப்படும் விஷய நுகர்ச்சி அற்ற புண்ணிய மூர்த்தியான, நலம் கிளர் திருமொழி நாதன் - முத்தி நலம்விளங்கும் ஆகமத்தை மொழிந்தருளிய ஜினதேவன், அலந்தவர் அழிபசி அகற்றும் வாயிலும் - வறுமையால் வருந்தியவர்களின் மிக்க பசியைத் தீர்க்கும் சாதனங்களையும், குலங்களும்-நல்லொழுக்கங்களையும், குணங்களும் - நல்ல குணங்களையும், கொணர்ந்து நாட்டினான் - விண்ணுலகத்திலிருந்து கொண்டுவந்து இவ்வுலகத்திலே ஸ்தாபித்தான், என்ப - என்று சொல்லுவார்கள்.

அழிபசி - நற்குணங்கள் அழிவதற்குக் காரணமான பசி என்றுமாம். குலம் - நற்குலப் பிறப்பால் உண்டாம் ஒழுக்கத்துக்கு ஆகு பெயர்; அரசர் குலங்கள் என்றுமாம். மேல் தூதுவிடு சருக்கம் 105-ம் கவியைப் பார்க்க.)

---

396. ஆங்கவன் றிருவருள் அலரச் சூடிய
வீங்கிய விரிதிரை வேலி காவலன்
ஓங்கிய நெடுங்குடை யொருவ னாயினான்
பாங்குயர் பரிதிவேற் பரதன் என்பவே. 159.

அவன் திருவருள் அலர சூடிய - அந்த அருகதேவனது திருவருளை மிகக்கொண்ட, பாங்கு உயர் பரிதிவேல் பரதன் - பக்கத்திலே சூரியனைப் போன்ற வேலையேந்திய பரதனென்பவன், வீங்கிய விரிதிரை வேலி காவலன் - ஓங்கியெழும் விரிந்த திரைகளை உடைய கடலாற் சூழப்பட்ட பூமிக்குக் காவலனாகிய, ஓங்கிய நெடும் குடை ஒருவன் - ஓங்கியுயர்ந்த குடையை ஏந்திய ஏகசக்ராதிபதி, ஆயினான் என்ப - ஆனான் என்று சொல்லுவார்கள்.

திரை, வேலி - ஆகுபெயர்கள். பரிதிவேல் - உவமைத் தொகை.

---

397. ஆழியா லகலிடம் வணக்கி யாண்டவன்
பாழியா னவின்றதோட் பரத னங்கோர்நாள்
ஊழியா னொளிமல ருருவச் சேவடி
சூழிமால் யானையாய் தொழுது வாழ்த்தினான்.

சூழி மால் யானையாய் - முகபடாத்தை அணிந்த பெரிய யானையை உடையவனே, யான் நவின்ற - நான் சொன்ன, ஆழியால் அகல் இடம் வணக்கி ஆண்டவன் பாழி தோள் பரதன் - தனது ஆஞ்ஞா சக்கரத்தால் இந்த விசாலமான பூமியை ஜயித்துத் தன்னடிப்படுத்தி அரசாண்ட வலியைக்கொண்ட விசாலம் பொருந்திய தோள்களையுடைய பரதன் என்னும் அரசன், ஓர்நாள் - ஒருநாள், ஊழியான் ஒளி மலர் உருவம் செம்மை அடி - நித்தியனான ஜினதேவனுடைய ஒளிபொருந்திய தாமரைமலரின் வடிவைக் கொண்ட நல்ல திருவடிகளை, தொழுது வாழ்த்தினான் - வணங்கி வாழ்த்தினான்.

பா[ழி - அகலம், பெருமை. 'ஆண்டவன், நவின்ற (புகழப்பட்ட) தோட் பாழியான் பரதன், என்றும் அனுவயித்துரைக்கலாம்.

---

398. கதிரணி மணிமுடி வணங்கிக் காவலன்
எதிரது வினவினன் இறைவன் செப்பினன்
அதிர்தரு விசும்பிடை யமிர்த மாரிசோர்
முதிர்தரு முகிலிடை முழங்கிற் றென்னவே.

காவலன் - மன்னன், கதிர் அணி மணிமுடி வணங்கி - கிரணங்களைவீசும் மணிகளிழைத்த கிரீடத்தை அணிந்த தலையால் வணங்கி, எதிரது வினவினன் - எதிர்கால விருத்தாந்தங்களைக் கேட்டான். அதற்கு, இறைவன் - அருகதேவன், அதிர்தரு விசும்புஇடை - அதிரும்படி இடிக்கும் ஆகாசத்தில், அமிர்த மாரி சோர் முதிர்தரு முகில் - அமிர்தமாகிய மழையைப் பொழியும் சூல்முதிர்ந்த மேகம், இடை முழங்கிற்று என்ன - இடையிடையே கர்ச்சித்ததைப்போல, செப்பினன் - பின் வருமாறு சொன்னான்.

ஆகாசவாணியாக இறைவன் செப்பினன் என்று உவமையாற் கொள்க.

களவியற் காரிகை விளக்கம்.

[776-வது பக்கத் தொடர்ச்சி]

26. * ஆக்கிய சீநற் றதுவினு வாங்கவ னுற்றதுரை
வாக்...யான்முன் கழற லதனை யெதிர்மறுத்தல்
தாக்கமர் பாங்கன் றனதுளந் தானே தனைவரைத்தல்
வீக்கமழ் தாழ்பொழில் சூழி[ட]ந் தன்னை வினவுதலே.

27. வினவுந் தகைமை யிடத்தியல் கூறல் மிகவிளங்கச்
சொனநன்குறிவழிச் சேறலிடங்கண்டு நான்[றுணி தல்]
...கோண் டிறைவனைத் தானேவிம ந்தலெழில்சிறந்த
வனிநின் றிடுநிலை கூற லவையவந் தேறுதலே.

28. தேறும்போ[ழிறனைக்கண்டு]வியந்தல்திருவேயெனல்
மாறும் படியன்றி யாற்றன் கிளத்தல் மருங்கணைதல்
ஊறும் புணர்ச்சி மகிழ்த லிருந்த..............
கூறுங் கிளவிக ளீரோன் பதுபாங்கன் கூட்டிடமே.

இச்சூத்திரமூன்றுமென்னுதலிற்றோவெனின், பாங்கற் கூட்டம் பத்து (? பதினெட்டு) வகைப்பட்ட கிளவியா மென்பதறிவித்தலைக் கருதிற்று. என்னை? உற்றது வினுதலும், உற்ற துரைத்தலும், கழறலும், கழற்றெதிருரைத்தலும், உளங்கவன் றுரைத்தலும், இடம் வினுதலும், இடத்தியல் புரைத்தலும், குறிவழிச் சேறலும், இடங்கண்டு துணிதலும், இறைவியை (? இறைவனை) வியத்தலும், நிலைகூறுகிளவியும், அவையவந்தேறலும், பொழில் கண்டு வியத்தலும், திருவெனவுரைத்தலும், ஆற்றான் கிளத்தலும், மருங்கணைதலும், புணர்ச்சிமகிழ்தலும், வெறுத்தலும் (?இருத்தலும்) என்றவாறு. அவற்றுள் உற்றதுவினுத லென்பது பிரிந்த தலைமகன் வேறுபாடு கண்டு பாங்கன் வினுதல். அதற்குச் செய்யுள்:—

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளு
முறைவா [னுயர்] மதிற் கூடலி
னய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்
கொலாம்புகுந் தெய்தியதே.

—திருக்கோவை - 20.

[இங்கு இருபத்து மூன்றாவது இலக்கமிட்ட ஏடு இல்லை]

* * *

[வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே]
தளையவிழ் நறுமலரே தனியவ டிரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
இளையவ ளிளமுலையே யெனையிடர் செய்தவையே.

—சிலப்பதிகாரம் - கானல். 16.

சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை
கான யானை யணங்கி யாஅங்
கிளையள் முளைவா ளெயிற்றள்
வளையுடைக் [கை]யளெம் மணங்கி யோளே.

—குறுந்தொகை - 119.

எலுவ சிறாஅ ரேமமுறு நண்ப
புலவ தோழ கேளா யத்தை
மாக்கட னடுவண் ணெண்ணாட் [பக்கத்துப்
பகுவெண் டிங்கள் தோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றா லெம்மே.]

—குறுந்தொகை - 129.

......னகூத்த......
னரும்பக் குரும்பைமுலை யன்னத்தை யின்சொற்
கரும்பைப் பெரும்புனத்தே கண்டு— தெரிந்துமுப்ப
தன்புலை..............ரரிசிதறி நீளியவாய்க் [பெரிய
கொன்பயிலும் வேல்பொற் குழைபொரு[து]ங்-தன்
மைக்கொண்ட காவி மலர்விழியா லென்னறிவைக்
[கைக்கொ]க[ா]ண்ட தோரிளமான் கன்று.

—கிளவித்தெளிவு.

கழறலென்பது தலைவனுக் குற்றது கேட்ட பாங்கன் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

உளமாம் வகைநம்மை யுய்யவந்
தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமு தாக்கிய
தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து
நின்றோர்வஞ் சிம்மருங்கு
லிளமான் விழித்ததென் றோவின்றெம்
மண்ண லிரங்கியதே.

—திருக்கோவை - 22.

ஆய்கின்ற தீந்தமிழ் வேந்த
னரிகே சரியணிவான்
றோய்கின்ற முத்தக் குடைமன்னன்
கொல்லியஞ் சூழ்பொழில்வா
யே[ய்]கின்ற வாயத் திடையொ
ரிளங்கொடி கண்டெனுள்ளந்
தேய்கின்ற தென்ப தழகிதன்
றோவென் சிலம்பனுக்கே.

—பாண்டிக்கோவை.

பொருந்தா [த]ம்ம புனையிழை மடந்தை
முருந்தேர் முறுவ லேந்தின்
வருந்தின னென்பது பெருந்தகை யெரிதே.

—பொருளியல்.

தேனகு முல்லை சொரிய விடைநின்று விரியும்]
மீன[கு] வாண்மதிபோல் வெண்கூதம்—[தான்
கானக நாட கடனே மடனேக்கி
யான திளையு மென[ல்].

—இன்னிசைமாலை.

தேயு மருங்குலாள் செல.........ய் கண்கண்டு
நீயு நெறிதளர்ந்து நிற்றியா—லாயு
மறிவெங்கே யல்லா லருங்குணங்க ளான
செறிவெங்கே திண்சிலம்பா செப்பு.

—கிளவித்தெளிவு.

கழற்றெதிர்மறை யென்பது பாங்கன்கழறத்தலைமகன் எதிர்மறுத்தல். அதற்குச் செய்யுள்:—

சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத்
தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான்
கயிலை மயிலைமன்னும்
பூணிற் பொலிகொங்கை யாவியை
யோவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை
மென்றோட் கரும்பினையே.

—திருக்கோவை - 23.

மண்கொண்டு வாழ வலித்துவந் தார்தம் மதனழிந்து
புண்கொண்டு நீர்மூழ்கப் பூலந்தை வென்றான் புகாரனைய
பண்கொண்டசொல்லமடந்தை முகத்தபைம்பூங்குவளைக்
கண்கண்ட பின்னை யுரையீ ருரைத்தவிக் கட்டுரையே.

—பாண்டிக்கோவை.

விண்டலங் கெஃகொடு வேணு
டெதிர்நின்ற வேந்தவித்தி
மண்டலங் காக்கின்ற மான்றேர்
வரோதயன் வஞ்சியன்னாட்
குண்டலஞ் சேர்ந்த மதிவாண்
முகத்த கொழுங்கயற்கண்
கண்டிலிர் கண்டா லுரையீ
ருரைத்தவிக் கட்டுரையே.

—பாண்டிக்கோவை.

நிணங்கொள் புலாலுணங்க னின்றுபுள்
ளோப்புத லலைக்கீ டாகக்
கணங்[கொ]க[ா]ள்வண் டார்த்துலாங்
கன்[னி நறு]ஞாழல் கையி லேந்தி
மணங்கமழ் பூங்கானன்
மன்னிமற் றாண்டோ
ரணங்குறையு மென்ப தறியே
னறிவேனே லடையே[ன் மன்னோ].

—சிலப்பதிகாரம் - கானல் 9.

அம்ம வாழி கேளிர் முன்னின்று
கண்டனி ராயிற் கழறலிர் மன்னோ
நுண்டாது பொதிந்த செங்காற்[கொழுமுகை]
முண்டகங் கெழீஇய மோட்டுமண லடைகரைப்
பேஎய்த் தலைஇய பிணரரைத் தாழை
யெயிறுடை நெடுந்தோடு காப்பப் [பலவுடன்]
வயிறுடைப் போது வாலிதின் விரியப்
புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பி
னிவர்திரை தந்த வீர்ங்கதிர் முத்தங்
கவர்நடைப் புரவி[க் கால்]வடுத் தபுக்கு
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தற்
போதுபுறங் கொடுத்த வுண்கண்
மா[தர்]வாண்முக மதைஇய நோக்கே.

—நெடுந்தொகை - 130.

இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்டுகொளற் கரிதே.

—குறுந்தொகை - 58.

நயனு நன்று நாணுநன் குடை[மை]யும்
பயனும் பண்பும் பாடிறந் (? பாடறிந்)தொழுகலு
நம்மிலு மறிவென் மன்னோ தம்மென
வெதிர்த்த துத்தி யேரிள வனமுலை
விதிர்த்துவிட் டன்ன வந்நுண் மருங்கு
லைம்பால் வகுத்த கூந்தற் செம்பொற்
றிருநுதல் பொறி[த்]த தேம்பா யோதி
முதுநீ ரிலஞ்சி பூத்த குவளை
யெதிர்மலர்ப் பிணைய லன்னவ
ளரிமதர் மழைக்கண் காணா வூங்கே.

—நற்றிணை - 160.

[இருபத்தாறா மிலக்கமிட்ட ஏடு இல்லை]

* * *

[வல்லிச் சிறுமருங் குற்பெருந் தோண்மட வார்வடிக்கண்
புல்லிப் பிரிந்தறி யாதமந் தாரத்தெங் கோன்புன]னாட்
டல்லித் தடந்தா மரைமல ரோவவன் றன்னணி[யார்[யே,
கொல்லிக்குடவரை யோ வண்ணல்கண்டதக்கொம்பி]னை

—பாண்டிக்கோவை.

கரங்குவித்த கண்ணுகா நண்ணுதல...

... ...

[அரங்குவி]த்த செவ்வேலா யஞ்சாத நின்னை
யிரங்குவித்த மாத ரிடம்.

—இன்னி[சைமாலை].

... ...

......ழ லண்ணல் நெஞ்ச
மாழ்துய ரெய்த வணங்கிய வணங்கே

—பொருளியல்.

... ... (உக)

ழிம்பரோ யாதோ விடம்வடிவு—கொம்பரோ
வண்ண மயிலோ கிளியோ மலைநாட

... ...

—கிளவித்தெளிவு.

இடத்தியல்புரைத்தல் என்பது பாங்கற்குத் தலைமகன் கண்ட விடமும் வடிவும்[உரைத்தல். அதற்குச் செய்யுள்] வருமாறு:—

விழியாற் பிணையாம் விளங்கிய லான்மயி லாமிழற்று
மொழியாற் கிளியா முது[வா னவர்த முடித்தொகைகள்]
கழியாக்கழற்றில்லைக் கூத்தன்கயிலை முத்தம் மலைத்தேன்
கொழியாத்திகழும்பொழிற்கெ[ழிலாமெங்குலதெய்வமே]

—திருக்கோவை - 29.

ஒத்த மயிற் குலமுமெழிற் றொளி வாணகைக்கு
முத்த மயிற்கில முல்லைகொ லோ.........
.........ற்குலவாளிற் கொய்த வரங்கர் குன்றிற்
சுத்த மயிற்குல மாமியல் பார்க்கிலத் தூய்நகைக்கே.

—கோயிலந்தாதி?

அடிவண்ணந் தாமரை யாடர
வல்கு லரத்தமங்கை
கொடிவண்ண நுண்ணிடை கொவ்வைச்செவ்
வாய்கொங்கை கோங்கரும்பின்
படிவண்ணஞ் செங்கோற் பராங்குசன்
கொல்லிப் பனிவரைவாய்
வடிவண்ண வேற்கண்ணி னுலென்னை
வாட்டிய வாணுதற்கே.

—பாண்டிக்கோவை.

திருமா முகத்திங்கள் செங்கய
லுண்கண்செம் பொற்சுணங்கேர்
வரமா முலைமணி[ச் செப்பினை
வானவன் கானமுன்]னக்

குருமா நெடுமெதிற் கோட்டாற்
றரண்கொண்ட தென்னன்[கன்னிப்
பெருமான் வரோதயன் கொல்லியஞ்]
சாரலப் பெண்கொடிக்கே.

—பாண்டிக்கோவை.

குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயல
ளையளரும்பிய முலையள்
செய்ய வாயள் மார்பின சுணங்கே.

—ஐங்குறுநூறு - 255.

இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி கூடலு மணங்கே
யரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்[த] திலதமு மணங்கே.

—காரிகைச்செய்யுள்.

அம்ம் பவள்ள் வரிநெடுங்க ணுய்வஞ்சிக்
கொம்ம் பவள்ள் கொடிமருங்குற் கோங்கி
னரும்ம் பவள்முலை யொக்குமே யொக்குங்
கரும்ம் பவள்வாயிற் சொல்.

—பழம்பாட்டு.

காதுடனே காதுங் கயலிரண்டுஞ் செங்கமலப்
போதுடனே நின்று புடைபெயரத்—தாதுடனே
வண்டாடுஞ் சோலை மயில்போல் வரிப்பந்து
கொண்டாட நான்கண்டேன் கொம்பு.

—கிளவித்தெளிவு.

கொங்கை யரும்பாக் குழலளகம் வண்டாக
[அங்கை]தளி ராக வலர்விழியாத்—திங்கள்
குளிருந் தரளக் குடைக்கண்டன் கொல்லி
யொளி[த]ருங் கொம்பொன் றுளது.

—[கண்டன] லங்காரம்.

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

—காமத்துப்பால் - 1113.

குறிவழிச்சேறல் என்பது இடத்தியல்புரைப்பக்கேட்ட பாங்கன் அவ் விடநோக்கிச் சேறல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

குயிலைச் சிலம்படிக் கொம்பினைத்
தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங்
காக்குங் கருங்கட்செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் டியான்போய்
வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்படி கூய்ப்பெண்ணை
நண்ணும் பளிக்கறையே.

—திருக்கோவை - 30.

பொன்னங் கனைகழற் பூழியன் பூலந்தைப் போர்மலைந்த தென்னன் பொதியிற் செழும்புனங் காக்குஞ் சிலைநுதற்பூ ணன்னந்தனையா ரணங்கினை யாடமைத் தோளியையேழ் மன்னுங் கடலமு தந்தனைக் கண்டு வருகுவனே.

—பாண்டிக்கோவை.

தோகை மயிலைச் சுரும்பார் குழலணங்கைப் [ஞ்
பாகை யனையமொழிப் பைந்தொடியை—யோகைமிகு
சோலைக்கண் வெற்ப துடியிடையை யான் கண்டு
மாலைக்கு முன்னே வர.

—பழம்பாட்டு.

இடங்கண்டு துணித லென்பது தலைமகன் கூறின குறிவழிச்சேறலைப் (? சென்ற) பாங்கன் இடத்தெதிர்பட்டுத் துணிதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

வடிக்கண் ணிவைவஞ்சி யஞ்சு
மிடையிது வாய்பவளந்
துடிக்கின்ற [வா]வெற்பன் சொற்பரி
சேயான் றொடர்ந்துவிடா
வடிச்சந்த மாமல ரண்ணல்விண்
ணோர்வணங் கம்பலம்போற்
படிச்சந் தமுமிது வேயிவ
ளேயப் பணிமொழியே.

—திருக்கோவை - 32.

தண்டா தலர்கண்ணியண்ண றன் னுள்ளந்தளர்[வுசெய்த]
வண்டார் குழலவ ளேயிவள் மானீர் மணற்றிமங்கை
விண்டா ருடற்குன்ற மேறி விழிகட் கழுகுறங்கக்
கண்டான் பொதியி லி[துவே யவன்சொ]ன்ன
[கார்ப்புனமே.

—பாண்டிக்கோவை.

சினமும ழிந்து செருவிடைத் தோற்றதெவ் வேந்தர்கள்
[போய்க்
கனவும் படைகடை யற்[செற்ற வேந்தன்] கருங்குழலார்
மனமும் வடிக்கண்ணுந் தங்குமந் தாரத்தெம் மன்னன்
[கொல்லிப்
புனமு மிதுவே யிவளே[யவன்கண்ட பூங்கொடி]யே.

—பாண்டிக்கோவை.

வேங்கை யொள்வீ காந்தள் கமழு[ம்]
பூந்தண் சாரலு மிதுவே யேந்திலை
யயில்வே ல......யல் வண்ணமு மிதுவே.

—பொருளியல்.

எ...வாடட......ய ளிவ்வாட்ட
மவ்வாட்டந் தேர்வாட்டு............ட்டு
மிங்கிவன் றனிங் கிவளு மிவ்வையி
னின்றவன று ளுண்மைக் களவு.

—சிற்[பெ]றட்டகம்.

...............டைபைந்தடமுமிப் பனித்தடமே
கொந்தரும்பு.........கமிவளே களிவண்டுமேவும்
சுரிகூ............

—[...............]

வியத்தலென்பது குறியிடத்துச் சென்ற பாங்கன் றலைவனை வியத்தல். அதற்குச் செய்யுள் வருமாறு:—
குவளை[க் களத்தம் பலவன் குரைகழல் போற்]கமலத்
தவளைப் பயங்கர மாக்கிநின் றண்ட வ[யவத்தி
னிவளைக்]கண் டிங்குநின் றங்குவந் தத்துணை யும்பகர்ந்[த
கவளக் களிற்றண்ண லே] திண்ணி யானிக் கடலிடத்தே.

—திருக்கோவை - 33.

இருநெடுந் தோளண்ண லேபெரி
யான்வல்லத் தேற்றதெவ்வர்
வருநெடுந் தானையை வாட்டிய
கோன்கொல்லி மால்வரைவாய்த்
திருநெடும் பாவை யனையவள்
செந்தா மரைமுகத்த
கருநெடுங் கண்கண்டு மாற்றிவந்
தாமெம்மைக் கண்ணுதற்கே.

—பாண்டிக்கோவை.

சோதக வுடைத்தே நெஞ்ச மதிமிசை
மாதர் குவளை மலர்ந்த.........
.........கண்கண் டாற்றிய
பெருந்தகை யண்ணலைக் கழறினன் பெரிதே.

—பொருளியல்.

கண்ணு முகமுங் கதிர்முலையுங் கண்டக்கால்
.............................வெண்ணுதிற்ற
செவ்வண்ண வேலினன் சித்தர் தளராதே
யெவ்வண்ண மாற்றின னீங்கு.

—கிளவித்தெளிவு.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 9. பள்ளிபடைப் படலம்.

[778-வது பக்கத் தொடர்ச்சி.]

குணங்களுக் கிணங்கியே குறித்த மாற்றமோ.

புகழ்திணிந்தபோளவாய்ப் பெரும்பாலும் இதுகாறும் இருந்துவந்த பரதன் இனித் தனக்குரிய உருவோடும் உரையோடும் செயலோடும் கதையினுள் நிகழவருமாறு,மன்னவனுணையெழுதி முடங்கலோடுவசிட்டன் ஏவிய தூதுவர் கேகயன்நகர் கடிதின் சென்றடைந்தார். இதனைக் கம்பர், "பொருவில் தூதுவர் போயினர் பொய்யிலார்" என்பாராலும், பரிவினோடும் அவர் தமை வரவேற்ற பரதன், "நீதிலன்கொல் திருமுடியோன்" என்று வினவியதற்கு, "வலியன்" எனவும், "இளங்கோ எம்பிரானொடும் உலைவில் செல்வத்தனோ" என்று வினவியதற்கு இவர், "உண்டு" எனவும் விடை தந்து "கொற்றவன்தன் திருமுகங் கொள்க" என்று கொடுத்தனர். செவிடரோடு குருடரு மாயினாலன்றி மன்னன் மாய்ந்ததும் திருநாடு நீந்து இராமன் அரணிய மடைந்ததும் இத்தூதர் அறியாதவ ராகமாட்டார். ஒருகால், தயரதன் ஆவிநீத்த செய்தி அரண்மனையினின்று வெளிப்போந்து அயலிடங்களில்பரவுவதன் முன்னே, வசிட்டன் இத்தூதரை விடுத்திருப்பினும் இருக்கலாமாதலின், "திருமுடியோன் வலியவன்" என்றதும்,மன்னவனுணை எழுதிய முடங்கலே கொணர்ந்ததாய் இவர்கருதியிருக்கலாமாதலின்,"கொற்றவன்தன் திருமுகம் கொள்க" என்று கொடுத்ததும் அத்தூதுவர் நெஞ்சறிந்த பொய்யிலாது நிகழ்ந்திருப்பினும் இருக்கலாம். எனினும், "இராமன் உலைவில் செல்வத்தனோ" என்று கேட்டோற்கு, "உண்டு" என்றெதிருரைத்த அச்சொல், முடியின்றி அடவியிலிருந்தாலும் உலைவிலாச் செல்வத்தனே இராமன் என்று தம் நெஞ்சறிய ஓர் அமைதி வலிந்து கொண்டு, பரதனை வஞ்சிக்கவந்ததாதலின் வாய்மை எனும் வழக்கி லடங்குமாறில்லை. இத்தூதுவரின் முன்னையோர் வான்மீகத்தில் போந்தபோது, அன்னையர் மூவரும் தயரதமன்னனும் இராமஇலக்குமணர்களும் 'சுகமோ' என்று கேட்ட பரதனுக்கு, அவர் ஒன்றிலுந் தம் நாவினை ஒட்டவிடாமல், "மனிதரிற் சிறந்தவரே, தாங்கள் எவர்களுடைய க்ஷேமத்தைக் கேட்க விரும்புகின்றீர்களோ, அவர்களெல்லாரும் க்ஷேமமாயிருக்கின்றார்கள். தாமரையைக் கையிற் கொண்ட லக்ஷ்மி தங்களை எதிர்பார்க்கின்றாள். தங்களுடைய தேரைப் பூட்டக் கட்டளையிடுங்கள்" என்று விட்டனர். அவ்வாறுமின்றி, நிகழ்ந்தவைகளுக்கு நேர்மாறாகக் கூறத்துணிந்த இந்தத் தூதரைக் கம்பர், "பொருவில் தூதுவர் போயினர் பொய்யிலார்' என்று சாற்றவேண்டுவ தென்கொலோ தன் மெய்பொதிந்த நாவாற் றெரிந்து ?

'பொருவில் பொய்யில் ஆர் தூதுவர் போயினர்' என மாற்றி, நிகரில்லாத பொய்யில் நிறைந்த தூதுவர் என்று பொருள்கொண்டால் அதுவே அவர் பேசிய மொழிகளுக்குப் பொருந்திய உரையாகும் என்று வலிக்க நினைத்திலம். வாய்மையின் நீர்மையை நோக்குங்கால் இவர் உரைத்த தொன்றும் பொய்யோ வன்று. பிறர்கேடுந்தன்னலமுஞ்சூழ்வதற்கேற்றவாறு உண்மையைத் திரித்துரைத்தாலன்றி ஒருசொல் பொய்யினதிலக்கணம் எய்துவதில்லை. பரதனுக்கு வரவிருக்கும் வருத்தம் விரையாதிருக்குமாறே இத்தூதர் இவ்வாறு கூறினராதலின், அது மெய்யன்றாயினும், பொய்யுமன்று. பரதன்பால் இவர்க்கிருந்த அன்பினால் நேர்ந்ததோர் நெறியாம் இது. தூதிற்குரிய தன்மைகளில் அன்பையே முன்வைப்பார் திருவள்ளுவநாயனார். அன்பால் நிகழ்வதொன்றும் அறத்தின்புறஞ் செல்வதாகாதாதலின் பொய்யிலார் என்றித் தூதரைக் கம்பர் காத்துரைத்த கொள்கை மேதக்கதே.

தூதுவர் மொழியொடும் முடங்கலைக் கொண்டு கண்டு தன்முனைக் காணலாமெனும் ஆசைகடாவப் பரதன், கேகயர்கோமகன்பால் விடைகொண்டு தன்னிளையோனோடும், பொழுதும் நாளும் குறித்திடாது அஞ்ஞான்றே தேரேறி, புரவியின் ஈட்டமும் வேழக் கூட்டமும் புடைசூழ முரசினோடு பல்லியவிதங்கள் முன்முழங்க, மாகதர்வந்திகர் முதலியோர் வாழ்த்திசைக்கக் கோசலம் நண்ணலுற்றான். வான்மீகத்திற்போல், நிமித்தந் தெரிவித்த துற்களுவொன்றும் பரதன் முன்னிரவு கண்டிலனாதலின், பொலிவிழந்திருந்த தன் தேயத்தைக் காணுமளவும் துணுக்கமொன்றுமவன் நெஞ்சம் எய்தியிராது. பொழுதும் நாளுங்குறிக்காமல் புறப்பட்டதன் தீமை யிதுவென் றியம்புதற்குமில்லை. ஏற்ற நல்லோரை யெல்லாம் ஓர்ந்து இராமனுக்குத் திருமுடி புனையும்நாள் கணித்ததும், யாதும் நோக்காது பரதன் புறப்பட்டதும் இறுதியில் ஒன்றேயாயின.

வளமெலாம் வாடிப் பொலிவிழந்திருந்த வந்தக் கோசல நாட்டினைக் கலங்கிய மனத்தினோடும் கடந்து அயோத்தியை நண்ண அவ்விடத்தும்,

அண்ட முற்றுந் திரிந்தயர்ந் தாயமு
துண்டு போதியென் றுண்கதிர்ச் செல்வனை
விண்டொ டர்ந்து விலக்குவ போல்வன
கண்டி லன்கொடி யின்னெடுங் கானமே

[ஒளியுடைய கிரணங்கள் வாய்ந்த சூரியனை, "அண்டமெல்லாம் நீ அலைந்து சோர்ந்தாய்; ஆதலால் இங்குச் சற்றே தங்கி உணவருந்திச் செல்" என்று வானத்தை எட்டி அச்சூரியனை விலக்குவனபோன்ற நீண்ட கொடிகளின் தொகுதியைப் பரதன் கண்டிலன்.]

கொடை முரசின் ஒலிகேட்டிலன். களிறும்பிடியும் மற்றுளவிதியும் கொள்ளைகொண்டவர்போல் பெற்றுச் செல்லும் பாடகர்களைக் கண்டிலன். பசுவும் குதிரையும் யானையும் பொன்னும் அந்தணர் தானமாகப் பெற்றுப் போகக் கண்டிலன். தேருமின்றிப் பரியுமின்றி யானையுமின்றிச் சிவிகையுமின்றிப் பண்டியுமின்றி அயோத்திமாநகர் வீதிகள் நீர்வற்றிய மணலாறுபோல் தோன்றின. பரிசிலுந்தானமும்பெற்றுவரும் நடமாட்டமின்மையே இப்பரதனுக்கு முன்தோன்ற அங்கு வான்மீகத்தில் வந்த பரதனே, காமுகர்தம் போக்குவரவின்மையுங் கண்டு துணுக்கமுடன் பெருவியப்பெய்தினன். அயோத்திமாநகரில் காமுகர் குழாம்ருப்பினு மில்லாதொழியினும் பரதனுக் கதுவொருபொரு

ளெனப் புலாப்படாதெனத் தேர்ந்த கம்பர் அதனை விட்டுவிட்டார்.

இவ்வண்ணம் உட்கிய உணர்வினோடு கோமனை குறுகித் தன் தந்தைவைகிடம் நாடியபரதனை ஒருத்தி "உனதன்னை கூயனள் வருதி" என்றழைக்க அவ ளுடன் சென்று தன் தாயினை அடியில் வணங்கலும் அவள் சிந்தையாரத் தழுவித் தன் தந்தை தாய் தமர் முதலியோர் நலம் வினவப் பரதன், 'அதாம்' என அம்மாற்றத்தை விரைந்தகற்றி, "ஆண்டகைநெடுமுடி அரசர்கோமகன் யாண்டையான், பணித்திர்" என்று கேட்டனன்.

ஆனவ னுரைசெய வழிவில் சிந்தையாள்
தானவர் வலிதப நிமிர்ந்த தானையத்
தேனமர் தெரியலான் தேவர் கைதொழ
வானக மெய்தினன் வருந்தல் நீ யென்றாள்.

"வேற்றார் சென்றுளன் வேந்தன், நாளைக்கே வரு வான்" என்பதனின் மிகுந்ததோர் உணர்ச்சியின்றி அவன் வானக மெய்திய செய்தியை வழங்கியதுமல் லாமல், "வருந்தல் நீ" என்னுமம் மாற்றத்தைக்கேட்ட பரதன்,

வாயொளி மழுங்கத்தன் மலர்ந்த தாமரை
யாயலர் நயனங்க ளருவி சோர்தரத்
தீயெரி செவியில்வைத் தனைய தீயசொல்
நீயல துரைசெய நினைப்பரோ வெனு

[உதடு விளர்க்கவும், மலர்ந்த தாமரைபோன்ற கண்களி லிருந்து நீர் பெருகவும், "எரிகின்ற காதினுள் வார்த்தது போன்ற இக்கொடுஞ் சொல்லைச் சொல்வதற்கு நீயல்லாது வேறொருவர் நினைப்பரோ]

என்று எழுந்து ஏங்கி இரங்கி விழுந்து விம்மி வெய் துயிர்த்து அழிந்தழிந்து அரற்றினன். "அன்னையே அன்னையே உணர்வுதா னென்றுமின்றி என்னையே நீ இவ்வணமியம்பினய்" என வியத்தலின்றி இத் தீய சொல் செப்புதற்கொத்த கொடியவள் கைகேசியே என்று அம்மைந்தன் ஐயமறத் துணிந்திருந்தது எது பற்றியோவென் றாகிக்குமாறிக் கம்பராமாயணத்துள் எங்குங் காண்கிலம். என்றுமே கணவன்பால் காத லற்ற நெஞ்சமொடு கண்ணோட்டமில்லாப் பெண் ணாகி நின்றவளிக் கைகேசி என்று மதித்தறிந்திரு ந்த வொரு மைந்தனது மாற்றமாய்ப் பரதன்மொழி கள் கருதற்குரியன. வடநூல் வழிபற்றி நோக்குவோ மெனின் பரதன் தன்னுடைத் தாயினைப் பிழைபட நிறுத்தவனுமாகான். மன்னவ னூணயென்று முடங் கலுடன் தன்னை மாதுலன்மனையினின்று அயோத் திமாநகர்க்கு அழைத்தேக வந்தவத் தூதுவரை நோக் கி, தயரதன் இராமன் இலக்குவன் கோசலை சுமித்தி ரை முதலியோர்தம் சுகம் வினவிய பின்பு, 'சுயநயம் பாராட்டுபவரும், எப்பொழுதுங் கொடுந்தன்மை யுடையவரும், கோபகுணமுள்ளவரும், தம்மை எல் லாந் தெரிந்தவராக மதிப்பவரும், என்தாயுமான கை கேயி நோயற்றவராக இருக்கின்றாரா" என்று பரதன் குறித்துக் கேட்டனன் என்றால் வேறென் புகலவேண் டும். கைகேசி இழைத்துள பழியை இப்பொழுது அறியான் பரதன். ஆதலின், பின்னர் இவன் இரா மனைத் தேடிக் கானகஞ்செல் நெறியில், பரத்துவாச முனிவருக்குத் தன் அன்னையைக் காட்டி, "கோபகுண முள்ளவளும், திருத்தப்படாத புத்தியையுடையவ ளும், கருவமடைந்தவளும், கட்டழகியாகத் தன்னைக் கருதுபவளும், செல்வத்திற் பேராசை கொண்டவ ளும், பெருந்தன்மை யற்றவளும், பெருந்தன்மை யுடையவள்போலத் தோன்றுபவளும், கொடியவளும், பாவத்திற் கருத்தூன்றியவளும், கைகேயி என்ற பெயருடையவளுமான இவள் எனது தாய்' என (வான்மீகத்தில்) அறிமுகம் செய்துவைத்ததற்கு ஏதுவாயிருந்த செய்தியொன்றுந் தெரியாத காலத் திலேயே தூதனுடன் அவளை அத்துணை இழிவுறப் பேச நேர்ந்தானெனின் கைகேயிதான் இயற்கையி லேயே எத்துணை கயத்தியா யிருத்தல்வேண்டும். பரத் துவாசரைச் சந்தித்தநாள் பரதன் அவளிழைத்த கொடுமைகளுக்கு ஆற்றாத வஞ்சினம் மூண்டெழுஞ் சிந்தையனா யிருந்தமைபற்றி அவளிழைத்த காரியம் ஒன்றையே அவள் இயற்கையெனத் திரித்துப்பேசின னே பரதன் என்று ஐயுறவெய்துதற் கிடமிருக்கலாம். மற்றித்தூதுவர்பால், "என தன்னை கைகேசி சுகமோ" வென்று வினவினுற் போதாதோ! இத்துணை இழிந்த அடையாளங்களைக் குறித்துக் கேட்டாலன்றி இவ னன்னை கைகேசி யாரென்றறியாரோ தூதர்? எனின், வான்மீகமுனிவர் நூலின்படி கைகேசியின் குணங்கள் மிகவும் இழிந்தனவாயிருப்பதும், அவளை நினைக்குந் தோறும் அடக்கமாட்டா வெறுப்புப் பரதனுக்கே விளைவதும் இவ்வேண்டாவழி வகைகளால் புலப்படு கின்றன. மன்னவன் உயிரைத்தின்று இராமனைக்கான கங் கடத்திவிட்ட இவள் கொடுமையை அறிவதன் முன் தூதருக்கும் அறிந்தபின் பரத்துவாசருக்கும் பர தன் கூறியசொற்கள் ஒரு படித்தாய் அமைந்திருக்குந் தன்மை ஆராயத்தக்கது. ஈரிடத்தும், அவள் பொது இலக்கணத்தின் இழிவையேபரக்கப் பேசினன். "உன் அழகைக் காட்டிக் காட்டிக் கோசலையை இழிவுபட நிந்தித்திருக்கின்றாயாதலால் இராமன் பட்டமடைந்த பின் அவள் அப்பழியை உன்பால் வாங்கிவிடுவாள்" என்று முன்னர் மந்தரை கைகேசியை அச்சுறுத்திய மொழிகளையும் நினைந்தக்கால் பரதனது மதிப்பு ஆகார மற்றதும் ஆகாது. இச்செருக்கும் அச்செருக்கின் பரிவாரங்களாய சுயநயம் பேராசை வன்னெஞ்சு முத லிய குணங்களுமே வான்மீகத்தின்படி கைகேசிக்கு இயற்கையாக, சுல்கச்சூளை நிறைவேற்றித் தயரதனை மெய்யறம் காக்குமாறு செய்வதற்கே தன்னைத் தியா கஞ் செய்துகொண்டவோர் கற்புடைய வுத்தமபத்தினி யே கைகேசியென்று வான்மீகத்தின் உதவிகொண்டு ஸ்ரீமான். சோமசுந்தரபாரதியார் வாதிக்க முயல்வது எவ்வாறு பயன்பட இயலுமென்றறிகிலேம். *

கம்பர்பெருமானோ, இமையவர் செய் மாயத்தால் இவள் மனந்திரிந்த தென்று வெளிப்படையாய் அ மைதி கூறினுரேயன்றிக் கைகேயியைப் பெருங்கயத்தி யாய்ப் பிறப்பிக்கவில்லை. "இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ" வென்றும், "மன்னர் மன்னனேல் கணவன், மைந்தனேல் பன்னரும் பெரும்புகழ்ப் பர தன்" ஆதலின் கோசலைக்கு இதன்மேல் எந்நலம் எய்துதற் குளதென்றும் முதலில் கூனியைக் குறுக் கிட்டுரைத்தவோர் கைகேசி குணநல மாண்புகளிற் குறையாத பெருமாட்டி யாவதற்கும் ஐயமுண்டோ. பின்னர்ப் பரதன்,

* தயரதன்குறையும் கைகேசி நிறையும், என்னும் அவர் நூல் 1930 ஆண்டு, பின்னூறு மாதத்து இருபத்தைந்து இதழ்களில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கு
முயிர்ப்பாரங் குறைந்து தேய
உடரெலா முயிரில்லா வெனத்தோன்று
முலகத்தே யொருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை யறிந்திலையே
லிந்நின்றா ளென்னை யீன்றாள்

என்று குகன்பால் செப்பியபோதும், இவள் செய்த ஓர் கொடிய செய்கையைத் தொடர்ந்து ஏசுகின்று னேயன்றி இக்கைகேசியின் இயற்கையே இன்ன தென்று வைகின்றானலன். மற்று, அவள் கொடுமை யின் முடிவெல்லாம் தெரிந்த பின்னரும், தீமையே பூண்ட இயற்கைய ளிவளெனப் பொதுவுறப் பழிப் பதற்கு மனங்கொள்ளாப் பரதன், "மன்னவன் மாய்ந் தனன் வருந்தல் நீ" என்று கலங்காது அவள் கழ றிய ஒன்று பற்றியே, "தீயசொல் நீயல துரைசெய நினைப்பரோ" வெனவிளம்பிய காரணம் விளங்குதலரு மையே. கம்பர் பாட்டில் கைவைக்கும் வழக்க முள தாயின், "நீயிவை யுரைசெய நினைப்பரோ" எனப்பா டத்தை மாற்று மாற்று லிடர்தீரலாம். இப்பாடத்தின் படி அவ்வடி, "நீ இப்படிச் சொல்வாய் என்று எவர் நினைப்பார்" எனப்பொருள்பட்டுக் கைகேசியின் முன் னைய குணநலத்தைக் குறைவின்றி மன்னவைக்கும். எனினும் பாடத்தைத் திரித்துரைக்கும் உரிமையில் வழி, பரதனுக்கும் கைகேயிக்கும் அவ்விருவரையும் கற்பித்த கம்பரது கருத்திற்கும் ஏற்றவோர் பொருள் இவ்வடி ஏற்கவல்லதோவெனக் கருதுமளவில் ஒன்று புலப்படுகின்றது. "உன் தந்தை இறந்தான், ஆயினும் நீ வருந்தாதே, என்னும் இச் சொல்லை என்னை நோக்கிச்சொல்லத் தாயென்ற தன்மையால் நீ துணிந் தனைபோலும். மற்றவர் துணியார்' என்னும் பொரு ளும் இணங்கியதாகலாம். இப்பொருளில், கைகேயி இயற்கையில் கொடியவளாய் இருக்கவேண்டுமென் பது இன்றியமையாததன்று வருவது நோக்குங் கால் அவள் கொடுமையையுந் தழுவியிருத்தலால் இன்னணம் பரதன் ஓராது உரைத்தவனாகின்றான்.

மதிப்புரை

கோம்பி விருத்தம்

ராவ் ஸாஹிப்
V. P. சுப்ரமணிய முதலியார் G. B. V. C.
அவர்களால் இயற்றப்பட்டது.

விலை. அணா 8.

உலகறிந்த உண்மைகளே பெரும்பாலு முணரப் பெறுவதில்லை. ஒருபொருளுக் கிருபுறங்க ளுளவென் பதை மறந்துவிடுகின்றார் மாந்தர். ஆதலின். தாம் தாம் கண்டனைய காணுத ஏனையோரை யெல்லாம் பொறி யில்லா இழுதைகளென்றேனும் மெய்யில்லாப் பொய்ய ரென்றேனும் பலபடப் பூசலிட்டுப் பேசுவதே மாந் தர் தொழிலாகிவிடுகின்றது. தெரிந்திருக்கும் உண்மை களையும் ஒருமுறைக்குப் பன்முறை எடுத்துரைப்ப தால் அவ்வுண்மையின் நினைவு உறுதி அடையலாம். வேளைக்கொருவண்ணமாய்த் தோன்றும் கோம்பியைக் கொண்டு ஆங்கிலகவி மேர்ரிக் என்பவர் இக்கருத்தினை மிகச் சில பாக்களால் உரைத்துவைத்தனர். 'கோம்பி விருத்தம்' என்னும் பெயரோடு அவ்வாங்கிலப் பாக் களைச் சார்ந்து ஸ்ரீமான் சுப்ரமணிய முதலியார் முப் பத்தைந்தாண்டுகளுக்குமுன் எழுதி வெளியிட்ட இந்நூல் அக்காலத் தமிழறிஞர் நன்மதிப்பினைப் பெற் றது. "கோம்பி விருத்தம் குமைந்த நரியெலிகள், தேம்பியிறும்புஞ் சிறைகளையுப்—போம்படி வந்தானு முகில்விதா னத்தா லரியணைவீற், றீனுய மின்றிரு ந்த' என்று சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களே புகழ்ந்தா ரென்றால் வேறு செப்பல் வெண்டுமோ.

இப்போது அந்நூலின் இரண்டாம்பதிப்பாய், இந்து ரிலிஜியஸ் எண்டவ்மெண்ட் போர்டு கமிஷனராயிருக் கும் ஸ்ரீமான் டி. கெ. சிதம்பரநாத முதலியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்ற புத்தகம் ஒன்று எம் பார்வைக்கு வந்திருக்கின்றது. செய்யுள்களுக்குப் பொழிப்புரை யும் குறிப்புரையும் முன்னினும் சிறிது விரிவாகச் சேர்க்கப்பட்டிருப்பது இப்பதிப்பின் சிறப்பாகும். எழுபத்து நான்கு கலிவிருத்தங்களாலாகிய இந்நூல் தன்பால் திகழ்கின்ற பாலைநில வருணனையாலும் பொழில்வளத்தின் வருணனையாலும்,

இந்திர னொருவற்கு வேண்டிற் றீந்திடும்
ஐந்தரு வென்பயார் அவற்றைக் கண்டனர்
பைந்தரு விவண்பல பலர்க்கும் பல்லவும்
நைந்திர வாமலே நல்கல் காணலாம்

என்பதுபோல் இனிமையுடன் அமைந்த பல செய் யுள்களாலும், ஆங்கில முதனூலிலில்லாத பல உதா ரணங்களாலும் படிப்பவரை மகிழ்விக்கும் என நினைக்கின்றோம். அறிவினோடு தமிழன்பும் கம்ப ராமாயணத்தின்பால் ஆழ்ந்த ஆர்வமுமுடைய இந்நூ லாசிரியர் பதிப்பாசிரியர் இருவருக்கும் இத்தமிழகம் நன்றியுடையதாயிருத்தல் வேண்டும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்டேஷல் மருந்து 15 நாட் களுக்கு ரூ. 2-0-0.

யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதராஸ்.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மெடிகேடட்-டப்பி
கோரோஜனை மாத்திரை
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

1930-வது வருட வால்யூம் – பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும்.

1930-வது ஆண்டு இதழ்கள் கற்போருக்கு மிகவும் பயனளிக்கவல்லது. இந்நாள் மாந்தர் அல்லலே வாழ்க்கையென மயங்கிக் காற்றில்அடிபட்ட துரும்பெனப் பறக்கின்ற பரிபவம் ஈதென்றும், கற்பதின் பயன் அலையடங்கி வாழ்தல் என்றும் விளக்குவது 1930-ஆண்டின் தலையங்கக் கொள்கையாகும். அறியாமை வேண்டப்படும், விஷயத்திற்கேற்ற விளம்பரம், இருபக்கம் எதற்குமுளது, முயலுக்கு முயலவேண்டா, ஒக்க நினைப்பார் உறவு, நல்லோர்கடன், விளம்பினால் வெட்கக்கேடு, எதைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கவேண்டாவோ, தர்க்கத்தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள், வண்டிமாடும் மாட்டுவண்டியும், உரிமையாற் பெரியாராகார், மானமழிந்தபின், கலைகளே மானங்காக்கும், பள்ளியிற் பழுத்தபழம், சுண்டெலி ஆற்றல், வாலின் நீளம், பெருமையின் பெருமை ஆய பல தலைப்பின்கீழ் விஷயவாய்மை விளக்கப்பட்டுளது.

அவ்வாண்டில் கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் ஆரம்பமாயது. முதல் 25 இதழ்களில், மதுரை அறிஞரான-ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியாரது 'கைகேசியின் நிறையும், தசரதன் குறையும்' என்னும் நூல் ஆயப்பட்டுளது. இது கற்றோர்க்கு நல்விருந்தாகும். அறமே நினைத்தும் ஆற்றுவார் இன்னல், கவியைக் கடந்த கருத்து முளதோ, அமரர்க்கோர் கருவிமேய கேகயி ஆயினாள், அறத்தினைக் காக்கவோ வரத்தினை வேண்டினாள், கூனியை ஏற்றிய கோபுரமிதுவோ, மன்னவன் புகழைக் கொன்றோ மாதராள் பழியைக்காத்தல், என்னும் தலைப்புக்கள் பலவற்றின்கீழ் பாரதியார்நூல் ஆயப்பட்டுளது. கம்பர் வகுக்கும் அமைச்சின் பெருமை ஈதென்று, வள்ளுவர்துணை கொண்டும் வியாதர் உரைகொண்டும் விளக்கப்பட்டுளது. கம்பராமாயணத்தை ஆழ்ந்து படிப்பவர்க்குக் கலாநிலயத்தில் வரையலாகின்ற கட்டுரைகள் பயன் பெரிதளிக்கும்.

இவ்வாண்டில் இலக்கணம் கற்க விரும்புவார்க்கென்று புணரியல் முழுதும் எளியதாகும் வழியில் 50 இதழ்களில் வந்துளது. முயன்று படிப்போர் எளிதில் இலக்கணத்தைக் கற்றுவிடலாம். இலக்கண வல்லுநர்க்கும் எழும் பல சந்தேகங்கள் இங்கு தெளியவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் குறுந்தொகைஎன்னும் சிறந்த சங்கநூல் உரையுடன் பதிப்பிக்கப் பெற்றுளது. குறுந்தொகைஇப்பொழுது புத்தகரூபமாக இல்லையாதலால் இவ்வாண்டு இதழ்கள் அக்குறையைப் பூர்த்திசெய்கின்றது.

இலஞ்சிப்பாவை என்ற நாவலும், ஆச்சரிய சூடாமணி என்னும் நாடகமும் மானத சாத்திரமும், மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் வந்துள்ளன.

விலை விபரம் :—	உள்நாடு	வெளிநாடு
பைண்டு செய்யாதது	7—8—0	9—0—0
காலிகோ கில்ட்	8—8—0	10—0—0
அறை தோல் கில்ட்	9—0—0	10—8—0

புத்தகம் வேண்டுவோர் முன்பணம் அனுப்பி, தங்கள் ஊர் ரயில்வேஸ்டேஷனையும் தெரிவித்தால் To pay போட்டு ரயில்வே பார்சலாக அனுப்புவோம். ரயில்வே கட்டணமும் புத்தகம் ஒன்றிற்கு அணாக்கு மேல் ஆகாது. ரயில் இல்லாத ஊருக்கு போஸ்டில் அனுப்பத் தபால் செலவு ரூ. 2 ஆகும். வேண்டுவோர் புத்தக விலையோடு தபால்செலவுக்கென ரூ 2 சேர்த்து அனுப்பவேண்டும். பர்மா சிலோன் முதலிய விடங்களுக்கு ரயிலில் அனுப்ப இயலாது. பினாங் சிங்கப்பூர் மலேயா முதலிய வெளிநாட்டிலிருப்பவர் தபால் செலவிற்காகப் புத்தகம் ஒன்றிற்கு ரூ 3 சேர்த்து அனுப்பவேண்டும்.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

ஏற்படுத்தியது] **நாஷனல்** [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்வில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலீஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்வில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ். கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 328, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

வர்த்தமானம்.

சிற்பக்கலையும் நாகரிகமும்:—சென்ற வாரத்தில் ஸ்ரீமான் ஜீனராஜதாஸ் அவர்கள் இஸ்லாமியக் கலைச் சங்கத்தில் செய்த உபந்நியாசச் சுருக்கம் வருமாறு :-

ஒரு தேசத்தார் அல்லது ஒரு சமுகத்தாருடைய நாகரிகத்தை அன்னார்சிற்பக்கலைகொண்டு எளிதில் அறிந்துகொள்ளுதல் கூடும். சிற்பசாஸ்த்திரத்தின் துணையினால் அச்சாத்திரக் கலையையுடைய சமுகத்தினரின் மனத்தின்நிலையைத் தேர்ந்துவிடுதல் இயலும். இப்பொழுது இந்துமுகமதிய சிற்பநூலைச் சிறிது ஆராய்ந்து இவ்விரு சமுகத்தினரின் மானத நுண்மை யாதென்றுநோக்குவோம். இந்துக்களின் சிற்பத்தைத் தென்னாட்டுக் கோயில்களிலும் சில புராதன மாளிகைகளிலும் காண்கின்றோம். ஆக்ராவிலும், டில்லியிலும், வடநாட்டில் வேறுசில விடங்களிலும் கலப்பில்லாத முகமதிய சிற்பம் விளங்கும் கட்டிடங்கள் இருக்கின்றன. பலர் இவ் விருவேறு சிற்பங்களையும் கண்டிருக்கலாம்.

இந்துக்கள் தங்கள் கட்டிடங்களில் மனித உருவங்களை அதிகமாய் அமைக்கின்றனர். மகமதியர் உருவங்களை விரும்புவதில்லை. இந்துக்கள் கருங்கல்களினாலும் வேறு கடினமான கற்களினாலும் கட்டடங்களைக் கட்டுகின்றனர். சலவைக்கல் செம்மணற்கல் இவைகளையே மகமதியர்கள் வேலைக்கு உபயோகிக்கின்றனர். வடநாட்டில் இலேசான கற்கள் அகப்படுகின்றன. எனினும் இந்துக் கோயில்களும் பெரிய பண்டைக் கட்டிடங்களும் கடினமான கற்களினாலேயே கட்டப்பட்டுள்ளன. இந்துச் சிற்பிகள் தூண்களிலும் மற்றப் பாரந்தாங்கிகளிலும் தேவர்கள் கந்தர்வர்கள் அப்ஸரஸ்தீரிகள், வீரர்கள் முதலிய உருவங்களை வெட்டி அலங்கரிக்கின்றனர். முகமதியர்கள் மரங்களையும் இலை பூக்களையும் செதுக்குகின்றனர். சுருட்டு வேலைகளில் இந்துமுறையில் குதிரைகளும் யானைத்தலைகளும் இயற்றப்படும். சுருட்டு வேலையில் முகமதியர், பூக்கள் இலைகள் முதலிய இயற்கைப் பொருள்களை இயற்றுகின்றனர்.

இந்துக் கோயில்களில் சூரிய ஒளிக்கு இடமிலாதபடி கர்ப்பக்கிரஹங்கள் அமைக்கப்பெறுகின்றன. முகமதியர்கோரிகளில் சூரியவெளிச்சத்திற்கு இடமுண்டு. இந்துக்கள் கருங்கல்லின் நிறம்போன்ற மங்கலான நிறத்தை விரும்புகின்றனர். வேறுபாடான ஆழமான வர்ணங்களை முகமதியர்கள் விரும்புகின்றனர்.

இன்னொரு வித்தியாசமும் இரு கலைக்கும் உளது. முகமதியர்கள் பூக்களைச் செதுக்கினால் இயற்கையினின்று வேறு படாதபடி செதுக்குவர். இந்துச் சிற்பிகள்தங்கள் அலங்காரவேலைகளில் பசுவையோ குதிரையையோ யானையையோ செதுக்குவதில் இயற்கைப் பசு குதிரை யானைகளின் அமைப்பு அளவு முதலியவைகளை ஏற்பதில்லை. இயற்கை அமைப்பு அளவு தோற்றம் இவைகளை இந்துக்கள் கருத்தில் கொள்வதில்லை.

இதுவரை சொல்லிவந்த வேறுபாடுகளைக் கொண்டு இவ்விருவேறு இனத்தாரின் மனத்தையும் போக்கையும் ஆராய்ந்து பார்ப்போம். இந்துக்கள் பசுவையோ குதிரையையோ அப்படியே வெளியிடல் என்னும் கருத்தினர் அல்லர். பசுவின் உருவத்தினும் அதன் தத்துவமே இந்துக்களின் மனதைக் கவர்ந்தது. ஆனால் பொருளை இருக்கின்றபடி அமைப்பதினில முகமதிய மனம் திருப்தியடைந்து விடுகின்றது. தினம் குதிரையையும் யானையையும் பார்க்கின்றோம். அதையே உயிரில்லாதபடி சித்திரத்தில் காண்பதற்கு இந்து மனத்தில் இடமில்லை. முகமதியச் சிற்பி ஒருவன் சலவைக்கல்லால் கட்டிடம் ஒன்று அமைத்து அதில் பொன்னால் அலங்காரம் செய்து, "இதுபோல் [illegible] சுவர்க்கம் இருக்கும்" என்று சொல்லி[illegible].

இந்துச் சிற்பியோ கருங்கல்லினால் கட்டி அழகுபெற அமைத்து, சூரியன் ஒளி பாயாதபடி கர்ப்பக்ரஹம் அமைத்து, "ஐப, உபநிஷதங்கள் கடவுள் இவ்வுலகிலும் வந்துவசிக்கின்றார் என்று கூறுகின்றன. அவர் நீரும் நெருப்பும்போல் எங்கும் நிறைந்து இருக்கின்றார். அவரை யாரே அறிவர். அறிபவர் இறப்பினைக் கடந்து விடுகின்றனர். அப்படித் தாண்டினோர் முக்தர். இந்நிலையெய்த அவனை அறிவதல்லால் வேறு வழியில்லை." என்று தம்மிடம் வருவார்க்கு உரைப்பதுபோல் அமைத்து அமைதியில் உவக்கின்றனர். இந்துச் சிற்பக்கலைநூலையும் ஆகமநூலையும் அறிந்தோர் நான் இங்குச் சுருக்கமாகச் சொன்னவற்றின் பொருளை எளிதில் தெளிந்துகொள்வார்.

இந்துக்கள் பொருளினுடைய விளக்கமாக அதன் ஆவியை அதாவது தத்துவ நுட்பத்தைப் பற்றுகின்றனர். உருவத்தைப் பொருளென்று இந்துமனம் கொள்வதில்லை. இயற்கையைப் பற்றுகின்ற முகமதியர்கள், இலையும் பூவும் காயும் செவ்வனே கண்களில் படவேண்டிச் சலவைக்கல்லைத் தேடுகின்றனர். கருத்தையே நாடும் இந்துமனம் மங்கலான கருங்கல்லில் திருப்தி அடைந்துவிடுகின்றது. கல்லிலே இருக்கின்ற அரைகுறையான குதிரையின்கீழுள்ள கருத்தை இந்தியச்சிற்பி போற்றுகின்றான். எனவே அவன் மென்மையான கற்களை நாடுவதில்லை. முகமதிய சிற்பி பொருளின் கீழ்ப்புகுந்து நோக்குவது இல்லையாதலால், மென்மையான கற்களையும் வர்ணங்களையும் தேடுகின்றான். உருவத்தையே உண்மையென்று கொள்ளாத இந்துமனம் உருவத்தைக்கண்டு அஞ்சுவதில்லை. உருவத்தையே வாய்மையென்று கொள்ளும் முகமதிய மனம் உருவங்களை அமைக்க அஞ்சுகின்றது.

இருசமுகத்தாரின் சிற்பக்கலையின் நுட்பத்தை ஒருவாறு விளக்கினேன். இதனால் ஒரு சமுகத்தாருடைய கலைகள் உயர்ந்தனவென்றும் மற்றவர் கலைகள் தாழ்ந்தனவென்றும் சொல்வதற்கில்லை. அவரவர்க்குரிய கலைகள் அவரவர்களை எப்படி வேறு வேறு விதமாய் இயக்கி வைக்கின்றதென்பதை மட்டுங் காட்டினேன் இப்படி இரு வேறு வழியினதான சிற்பம் சிறக்க வேண்டுமெனின், ஒன்றினிற்கொன்று துணைபுரிய வேண்டும். அப்படித் துணையாய் அமைவது சிற்பக்கலை நிறைவு பெறுவதற்குதவி செய்யும்.

***

1930-வது ஆண்டில் இந்தியாவிலிருந்து 16220 குரங்குகள் மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன வெனத்தெரிகின்றது. கிழவர் குமாராவதற்குச் செய்யப்படும் சிகிச்சைமுறைக்கு இக்குரங்குகள் பலியாகின்றன.

***

தபால் தந்தி இலாகா டைரெக்டர் ஜனரல் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—அக்டோபர் முதல்தேதி முதல் தபால் ரிஜிஸ்தர் கட்டணம் 2 அணாவிலிருந்து 3 அணாவாக உயர்த்தப்படும். முன் கண்ட விலைக்கு விற்கப்படும் ரிஜிஸ்தர் கவரை வாங்கி உபயோகிப்பவர்கள் அதில் இன்னும் ஒரு அணா ஸ்டாம்பை ஒட்டிக்கொள்ளவேண்டும்.

***

இந்தியவைஸிராய் தற்காலப் பொருளாதார நெருக்கடியை உத்தேசித்து, தமது சம்பளத்தை 100-க்கு 20 வீதம் குறைத்துக் கொள்ளுகிறார். அரசப் பிரதிநிதியின் சம்பளம் ரூ20000. குறைக்கலான சம்பளம் 16000 ஆகும். இந்திய அரசாங்க நிர்வாகசபை அங்கத்தினர்கள் 100-க்கு 15வீதம் சம்பளத்தைக்குறைத்[illegible]வந்துள்ளார்கள். சிவில்சர்வீஸ் உத்[illegible] சம்பளம் இனி 100-க்கு 10-வீதம் குறையும்.

188938

KALANILAYAM.
REG. No.: M 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"



பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்ய விர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணு 8.

சுகுணவதி அல்லது மணம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆட்டோன் படங்கள். உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.

விலாசம்:—ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)